www.padippakam.com

AIR

விலை 3-00 ரூபா

# ஈழ சுதந்திரன்

# ELASUTANTIRAN



திருவள்ளுவராண்டு
உ ೦ உ ௭
மாசி-பங்குனி

மார்ச் 1996

புத்தகம்: 8 இதழ்: 3

- அரசாங்க அதிகாரிகள் ஏறிட்டுப் பார்ப்பதில்லை! அவதி நீக்குவதில்லை!
- சிறிலங்காஅரசோயாழ்ப்பாணத்திலிருந்து பெரும்எடுப்பில்மக்கள் வெளியேறவில்லையென்று காட்டிக் கொள்கிறது
- புலிகளோ அரசு ஏஜண்டைக் கையைக் காட்டிவிட்டு யாழ்ப்பாண மக்களை அம்போ என்று விட்டுவிட்டனர்
- தொண்டு நிறுவனங்களின் நிவாரண வேலை எங்கும் எதுவும் நடக்கவில்லை
- பசி, பட்டினி தொற்றுநோய்களின் அகோர படையெடுப்பு

## 5 லட்சம் தமிழ் மக்கள் அனாதைகளாகக் காட்டில் அன்றாடம் செத்துக் கொண்டிருக்கும்

# அவலநிலை

## இந்தியாவை எதிர்பார்த்து அந்த மக்களின் ஏக்கம்

சிறீலங்கா சிங்களப் பேரினவாத அரசின் முப்படைகளின் தாக்குதலால் 1995 அக்டோபரில் வெறுங்கையுடன் வெளியேறிய 5 லட்சம் தமிழ் மக்கள், இன்றளவும் கிளிநொச்சிக் காடுகளில் சொல்லொணாத் துன்ப துயரங்களால் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

அரசாங்க அதிகாரிகள் அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. நடுநிலையாளர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சிங்களவர்கள் கூட அவர்களைக் கண்டு கொள்வதில்லை. தொண்டு நிறுவனங்களின் நிவாரணப் பணிகளும் கிடையாது. சந்திரிகாவின் சிறீலங்கா அரசோ யாழ்ப்பாணத்திலிருந்து மற்றவர்கள்சொல்கிற மாதிரி மக்கள் வெளியேறவில்லை என்று காட்டிக் கொள்ளப் பார்க்கிறது. புலிகளோ, அரசாங்க ஏஜெண்டைக் கையைக் காட்டி விட்டு, அப்பாவியாழ்ப்பாண மக்களை அனாதையாக அம்போவென்றுவிட்டுவிட்டது.

புலிகள் இனிமேல் தங்களால் பாதுகாப்பளிக்க முடியாது; வெளியேறி விடுங்கள் என்று சொன்னதாலும், சிறீலங்காவின் முப்படைத் தாக்குதல்களைத் தாங்க முடியாததாலும் யாழ்ப்பாணத்தை விட்டு ஒட்டுமொத்தமாக கொட்டும் மழையில் வெற்றுக் கையோடு வெளியேறி வந்த 5 லட்சம் தமிழ் மக்கள் இப்போது கிளிநொச்சி வீதிகளிலும், காடுகளிலும் பசி, பட்டினியோடும், தொற்று நோய்களின் கொடுமையாலும் சிக்கிக் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியா உதவிக்கு வராதா? யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் பாதுகாப்புடன் திரும்ப மாட்டோமா? என்று ஏங்கிக் கிடக்கும் அந்த மக்களின் ஏக்கம் தீருமா?

உலகத்தில் எங்கும் நேர்ந்திராத-எந்தச் சமுதாயத்திற்கும் ஏற்படடிராத அந்த மக்களின் அவல அனுபவங்களை, பல்வேறு தரப்புகளிலிருந்து கிடைத்த தகவல்கள் மூலம் இங்கே தந்துள்ளோம்:

இலங்கை தமிழர் வரலாற்றிலே கடந்த1995 அக்டோபர் மாதம் நடந்த ஒரு செயல் உலகத்தின் கவனத்திற்கு போதுமான அளவு ஈர்க்கப்படாமல் இருக்கிறது கடந்த 4 வருடங்களிலும் ருவாண்டா நாட்டில் ஒரு மில்லியன் சனங்கள் இடம் பெயர்ந்ததற்கு பிறகு சரித்திரத்திலேயே மிக மோசமாக இலங்கையில் 5 லட்சம் பேர் இடம் பெயர்ந்த கதை. இந்த உலகத்தின் கண்ணிற்கு இன்னும் தெரியாமல் இருக்கின்றது. அக்டோபர் மாத மத்தியிலே இலங்கை அரசாங்கம், பல்வேறு சர்வதேச அரசாங்கங்களுடைய மறைமுக-நேர்முக ஆதரவுடன் "சூரிய ஒளி தாக்குதல்" என்ற பெயர் கொண்ட தாக்குதல் மூலம் தமிழர்கள் மீது மிகப்பெரிய தாக்குதலைத் தொடங்கியது.

தமிழரின் மையமாக இருக்கின்ற யாழ்ப்பாண நகரை மையமாகக் கொண்டு மூன்று பக்கத்திலிருந்தும் இலங்கை அரசாங்கத்தின் படைகள் தாக்கத் தொடங்கின. மக்கள் தங்களை வழமையாகக் காப்பாற்றுகின்ற புலிப்படையினர் தங்களைக் காப்பாற்றுவார்கள் என்ற எண்ணத்தில் இருந்த போது, படையினுடைய வேகமும், முன்னேற்றமும் மக்களை வியப்பில் ஆழ்த்தின. ஆயினும் பத்துப் பன்னிரெண்டு நாட்களாக குண்டு மழை பொழிந்த பின்பும் புலிப் படையினர் தங்களைக் காப்பாற்றுவார்கள் என்ற எண்ணத்துடனேயே இருந்தனர். ஆயினும் இம்முறை அதிகமாக ஆயுதங்களுடனும் சிறப்பாக "தென் ஆபிரிக்காவிலிருந்து பெறப்பட்ட ஆயுதங்கள்" என்று கூறப்படுகின்ற புது ஆயுதங்களுடன் அரசாங்கம் பெரும் கொண்ட தாக்குதலும் "Artilery fire" என்னும் ஆயுதெருப்பிடலைத்தொடங்கின.

### ஷெல் தீபாவளி

இதிலேஇவர்கள் நேருக்கு நேராகப் போரிடாமல் "Carpet bombing" என்ற முறையைப் பின்பற்றி முழுக்க முழுக்க ஒவ்வொரு இடமாகக் காலி பண்ணுவதற்காக குண்டு மழை பொழிந்தார்கள்.

ஆகவே நேரடியாகப் பார்த்த மக்கள், அந்தக் காலத்திலே நன்றாக இருந்த போது தீபாவளியைக் கொண்டாடியிருந்த இரவை நினைவு கூர்ந்தார்கள். அந்த இரவிலே ஒரு நிமிடமோ, ஒரு வினாடியோ இடைவிடாமல் பட்டாசுகள் வெடிப்பது போன்று இங்கும் இருந்தது என்று தான் எண்ணியதாக ஒருவர் சொன்னது குறிப்பிடத்தக்கது.

### புலிகளின் கைவிரிப்பு

...ஒரு நாள் மட்டும் தன்னுடைய பகுதியில் 600 ஷெல்கள் விழுந்ததாக ஒருவர் சொன்னார். சிலர் இந்த 10 நாட்களிலேயாழ்ப்பாணத்தின் மீது ஏறக்குறைய 60,000 ஷெல்கள் வீசப்பட்டிருக்கும் என்று கூறுகிறார் ஆகவே மக்கள் அனைவரும் இரவும் பகலும் அக்டோபர் 26ம் தேதியிலிருந்து தங்களுடைய தூக்கத்தை இழந்து நிற்கின்ற நேரத்திலே 29ம் திகதி புலிப் படையினர் ஓடிவந்து, தங்களால் இனிமேல் தாக்குப் பிடிக்க இயலாது என்றும், உடனடியாக ஓட வேண்டும் என்றும் சொன்னார்கள். எல்லோருக்குமே சிறப்பாக கடற்கரையோரக் கிராமங்களுக்கு சரியாக 6 மணிக்கு தங்களுடைய வாகனங்களில் வந்து "Auto Clearக்குள் (தாமாகத் துடைத்தெறியும் நிலைக்கு) இலங்கை ராணுவம் வந்து விட்டது. எங்களால் இனி எதும் செய்ய இயலாது. தமிழ்மக்கள் அனைவரும் ஓடிப் போங்கள்" என்று கூறினார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

### சந்தி சிரிக்கும் சந்திரிகாவின் மனிதாபிமானம்!

ஐந்து லட்சம் மக்கள் அன்றாடம் சாகக் கண்டும் அசையாமல் இருக்கும் சந்திரிகா, தொண்டு நிறுவனங்களின் சேவைகூட அவர்களுக்குக் கிடைக்காமல் தடுக்கும் இனவெறியர் எப்படி சமாதானப் புறா ஆவார்? அடிப்படை மனிதாபிமானமே இல்லாதவர், அதன் அடிப்படையில் வளரும் சமாதானத்தை எப்படிக் கொண்டு வருவார்? உலக சமுதாயமே சிந்தித்துப்பார்!

## ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

படிப்பகம்

''பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டுமி போனால் முளையாதாம்-கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி
ஏற்ற கருமம் செயல்''

(மேலே உள்ள உமி நீங்குதற்கு முன்னர் முளைப்பது அரிசியே ஆனாலும் உமி நீங்கிப் போனால் அவ்வரிசி முளைக்காது; அதுபோல, அடைந்த பெரிய வல்லமை உடையவருக்கும் துணை வலிமை இல்லாமல் எடுத்துக் கொண்ட செயலைச் செய்து முடித்தல் இயலாது )

# தெளிவு

## பொய்யில் புலவர் மொழியை புலிகள் செவியேற்கட்டும்

''ஆற்றாரும் ஆற்றி அடுப; இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்'' (குறள் : 4-3)

அதாவது 'தக்க இடத்தை அறிந்து தம்மைக் காத்துக் கொண்டு, பகைவரிடத்திற்சென்று தம் செயலைச் செய்தால், வலிமை இல்லாதவரும் வலிமை உடையவராய் வெல்வர்' என்று 'இடனறிதல்' என்ற அதிகாரத்தின் முற்பகுதியில் கூறிய திருவள்ளுவரே,

''காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு''

அதாவது 'வேல் ஏந்திய வீரரைக் கோத்தெடுத்த கொம்பு உடைய அஞ்சாத யானையையும், கால் ஆழும் சேற்று நிலத்தில் அகப்பட்டபோது நரிகள் கொன்றுவிடும்' என்று அதன் கடைசிக் குறட்பாவில் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் கொரில்லாப்போரில் வல்லவர்கள் என்பது உலகப் பிரசித்தம். அவர்களுடைய சரிவு எங்கே தொடங்கியதென்றால், ஆயிரம்பேர், இரண்டாயிரம் பேர் என்று சிங்கள ராணுவத்தினர் ஆயத்த நிலையில் இருக்கும் அவர்களுடைய ராணுவ முகாம்களை இருநூறு முந்நூறு பேராக வலியச் சென்று தாக்கியபோதுதான்.

ஆம்; வெலிஓயா ராணுவ முகாமை புலிகள் தாக்கச் சென்று, ராணுவத்தினர் அவர்களை ஒட்டு மொத்தமாக அழித்துக் கண்ட துணிவுதான், அவர்களுக்கு யாழ்ப்பாணத்தையே வெற்றி கொள்ளும் நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டதென்றால் அது மிகையாகாது.

புலிகள் செய்வதெல்லாம் நியாயம் என்பதற்காக நாம் இதைச் சொல்லவில்லை. புலிகளின் தோல்வி ஒட்டுமொத்த ஈழத் தமிழினத்தின் தோல்வி என்று பேசப்படுவதால், புலிகள்தாம் ஈழத் தமிழினத்திற்கு இன்றுள்ள ஒரே பாதுகாவல் என்று வாதிடப் படுவதால், 'பேரினவாதச் சிங்கள அரச பயங்கரவாதம்' அவர்களை வெற்றிகொள்ள அவர்களே துணைபோய் விடக்கூடாது என்றுதான் சொல்கிறோம்.

புலிகளின் பயங்கரவாதச் செயல்களையும் நாம் கண்டிக்கிறோம். அதற்காக சிங்கள பௌத்தப் பேரினவாத அரச பயங்கரவாதம் செய்யும் அட்டூழியங்கள் நியாயமாகிவிடமாட்டா.

சொல்லப்போனால் புலிகளின் பயங்கரவாதத்தை வளர்த்ததே சிங்கள பௌத்தப் பேரினவாத அரச பயங்கரவாதம்தான் என்றால் அது மிகையல்ல. அந்த அரச பயங்கரவாதத்திற்கு ஈடுகொடுக்கிறார்கள் என்பதற்காகத்தான் தமிழ் மக்களில் பலர் புலிகளுக்கு முட்டுக் கொடுக்கிறார்களேயன்றி, பயங்கரவாதத்தின்மீது ஈழத்தமிழ் மக்கள் கொண்ட பாசத்தின் காரணமாக அல்ல.

இதைப் புரிந்து கொள்ளாமல் திட்டமிட்டுக் கட்டப்பட்டுள்ள சிங்கள பௌத்தப் பேரினவாத அரச பயங்கர வாதத்தையும், அதன் எதிரொலியாகப் பிறந்த புலிகளின் பயங்கரவாதத்தையும் ஒரு நிறையில் வைத்துப் பேசுவதும், ஈழத் தமிழ் மக்களையெல்லாம் பயங்கரவாதக் காதலர்கள்போல நோக்குவதும் உண்மைக்கு மாறானவையாகும்.

உள்ளபடி சர்வதேச சமுதாயம் தலையிட்டு, குறிப்பாக இந்தியா தலையிட்டு, இலங்கையில் தமிழ் மக்களின் நியாயத்தை-உரிமையை நிலைநாட்டிக் கொடுக்குமானால், யாரையும் பாராமல் முன்சென்று சமாதானத்தை வரித்துக் கொள்வதில் தமிழ் மக்களே முன்நிற்பார்கள்.

1987 அனுபவம் அப்படியில்லையே என்று சிலர் சொல்லக்கூடும். அன்றைய இந்தியத் தலையீட்டைத் தமிழ் மக்களுக்குச் சார்பானது என்பதைவிடச் சிங்களவர்க்குச் சார்பானது என்று சித்தரிப்பதில் ஜெயவர்த்தனா வெற்றிபெற அனுமதித்ததும், பிரேமதாசா விரித்த வலையில் புலிகள் விழுந்ததும் அந்த வாய்ப்பைக் குலைத்து விட்டன. என்றாலும், இன்றும்கூட இலங்கையில் இந்தியாவின் உண்மையான நேச சக்திகளாக விளங்குபவர்கள் தமிழ் மக்களே என்பதை யாரும் மறுக்க முடியாது. சிங்களரைப் பொறுத்தவரை சோதனையான கட்டங்களில் எல்லாம் இந்தியாவின் பகை நாட்டுக்கே துணைபோயிருக்கிறார்கள் என்பதையும் மறுக்க முடியாது

எனவே, புலிகளையிட்டு, சிங்களபௌத்தப் பேரினவாத அரச பயங்கரவாதத்தின் அட்டூழியங்களை நியாயப்படுத்துவதோ, முடிந்தவரை தமிழ்மக்களைப் பலவீனப்படுத்தி சிங்கள ஏகாதிபத்தியத்தை முழுமைப்படுத்துவதற்காக சந்திரிகா அரசுபோடும் போலிச் சமாதான வேடங்களை ஆதரிப்பதோ சரியாகாது.

உண்மையான சமாதானம் தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளை சிங்கள மக்களை ஒப்புக்கொள்ளச் செய்வதிலேயே அடங்கியிருக்கிறது.

# சிறீலங்காவில் D.M.U. கட்சியின் தில்லுமுல்லு தர்பார்!

அன்புள்ள சந்திரசேகரன் ஐயா,

ஈழ சுதந்திரனில் இம்முறை வெளியான தங்களின் அறிக்கை மிகவும் சிறப்பாக இருந்தது. வாசித்து நாங்கள் எல்லோரும் பெரும் மகிழ்ச்சி அடைந்தோம். முதன் முதலில் சந்திரிகா ஒரு பெரிய ஏமாற்றுப் பேர்வளி எனக் கூறியதும் நீங்கள்தான் நல்லவர் போல் நடித்து-சனாதிபதியாக வந்ததும் தன் நரிப் புத்தியை மிகவும் கச்சிதமாக உபயோகித்து தமிழ் மக்களை வேறு எந்த ஜனாதிபதிகள் ஏமாற்றியதிலும் பார்க்க மிக வஞ்சகமாக ஏமாற்றியது மட்டுமல்லாமல், தமிழ்மக்களைக் கொன்று குவித்து வீடு வாசல் இல்லாமல் பிறந்த மண்ணில் இருந்து விரட்டி அதுவும் குழந்தை குஞ்சுகளோடு கொட்டும் மழைக்காலத்தில் கடல் கடந்து காடுகளில் தஞ்சம் புகும் அளவுக்குத் திட்டம்போட்டு அனுப்பியமையை எண்ணும்போது எவரும் ஆத்திரப்படாமல் இருக்க முடியாது.

இது மட்டுமா! மீண்டும் மக்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்புமாறும், அப்போதுதான் நிவாரண உதவிகள் செய்வது என்கிற மாதிரி இப்போது அறிக்கைகள் விடுவதும், தாங்களும் உதவி செய்யாது-மற்றும் தொண்டு நிறுவனங்கள் கூட உதவி செய்யவும் தடைவிதித்து வருவதும் எந்த ஈவிரக்கமும் அற்ற-இராட்சதனும் செய்யாத அளவு மிக மோசமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய ஆணவம் படைத்த அகங்காரியின் ஆட்டம் அதிக காலம் நீடிக்காது.

இறைவன் பொறுக்க மாட்டார். மிக விரைவில் ஒரு முடிவு காணலாம் என்றே எண்ணுகிறேன். இடது சாரிகளின் ஒத்துழைப்பும் மிகவிரைவில்விலக்கப்பட்டு, தாய் எவ்வழியோ அப்படி இந்த ஆணவக் காரியும் வந்த வழி தெரியாமல் மறையும் காலம் வெகு விரைவில் காணலாம். உலகத்தையே ஏமாற்றி விடலாம் என எண்ணுவது கானல் நீர் போல் ஏமாற்றப் படப்போவது சந்திரிகாதான். ஆசைக்கும் ஒரு அளவுதான். ஆணவம் நிலைக்காது.

மேலும் தங்களின் நன்றியும் அபிப்பிராயமும் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை-தி.க. செயலாளருக்கு ''விடுதலை'' மூலம் சமர்ப்பித்து இருந்தமையையும் வாசித்து மகிழ்ச்சி அடைந்தேன்.

## ஒரு சிறப்பு மடல்

சிங்கள இராணுவத்தை தமிழ்ப்பகுதிகளில் இருந்து வெளியேறும்படி ஆணித் தரமாக 'ஈழ சுதந்திரன்' மூலம் கோரியிருப்பதும் பெரும் மகிழ்ச்சியைத் தருவதாகும். யாழ் அரச ஊழியர்கள் யாழ் திரும்பினால்தான் டிசம்பர் சம்பளம் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளதும் இங்கு நோக்கத்தக்கது. தந்தை அன்று தமிழ் அரச ஊழியர்களை சிங்கள மொழி தேர்ச்சி பெறாதவர்கள் என்பதற்காக பழிவாங்கி எத்தனையோ அரச ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தபெருமையைப் பெற்றவர். அதேபோல் இப்பெண்ணும் (மகள்) தமிழ் அரச ஊழியரையும் பழிவாங்க முற்படுகிறார்-ஆரம்ப நிகழ்ச்சியாக யாழ் அரச அதிபர் திரு. பொன்னம்பலம் அவர்களை பழிவாங்கியுள்ளது அப்பனுக்கு மகள் தப்பாமல் பிறந்திருப்பதைப் பூரணமாகக் காட்டுகிறது.

### பெண்ணல்ல ஆண்

இந்தப் பெண்ணின் ''குரலை வானொலியில் கேட்கும் போது ஆணின் குரல் போல்தானே கேட்கிறது (கரடிக்குரல்)! ஆணாகப் பிறக்க வேண்டியது தவறாகப் பெண்ணாகப் பிறந்து விட்டது. முன்பு U.N.P.யை Unclc Nehew Party என்பார்கள். இப்போது உள்ளதை எப்படி அழைப்பது? D.M.U Party-Daughter Mother Uncle Party—என்று அழைக்கலாம் போல் உள்ளது.

எங்கள் முகாம் தற்போது 44ல் இருந்து 52ஆக உயர்ந்துள்ளது. திருச்சி துரையூர் முகாமில் இருந்து 5 பேரும்-வேலூர் முகாமில் இருந்து இருவரும் சிறைச்சாலை ஒன்றில் (சேலம்) இருந்து ஒருவரும் இங்கு வந்துள்ளார்கள். துரையூர் சிறப்பு முகாம் மூடப்பட்டுள்ளது.

துரையூரில் இருந்து வந்தவர்களில் இரண்டு மாணவிகளும் அடங்குவர். இருவரும் என்னிடம் படிக்கிறார்கள். (வகுப்பு 6+8) இவர்கள் இருவரும் முன்பு இங்கிருந்துதான் துரையூருக்கு மாற்றப்பட்டவர்கள்.

எங்களுடைய முகாம்தான் நிரந்தரமாக இருக்கப்போவது போல் தோன்றுகிறது

உங்கள் அன்புள்ள
தொண்டன்
நா. சு. முருகேசு
சிறப்பு முகாம்,
செங்கற்பட்டு.

# வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் யாழ். பாடசாலைகள்

யாழ்நகரம் மற்றும் வலிகாமம் பகுதிகளின் முக்கிய பாடசாலைகளை மக்கள் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்துள்ள இடங்களில் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வடபகுதி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து பாடசாலைகள் ரீதியாக அவற்றின் மாணவர்கள், ஆசிரியர்கள் தங்கியுள்ள பிரதேசங்களை இனம்காணும் வகையில் விபரங்கள் திரட்டப்படுகின்றன. இந்த மதிப்பீட்டு விபரங்களை அடிப்படையாகக் கொண்டு வடமராட்சி. தென்மராட்சி பகுதிகளின் குறிப்பிட்ட இடங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிய வந்துள்ளது.

இதே வேளையில் யாழ், கன்னியர் மட பாடசாலை மிருசுவிலிலும் சென்.ஜோன்ஸ் கல்லூரி கிளிநொச்சியிலும் ஆரம்பிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க, கொழும்புத்துறையில் இயங்கி வந்த முதியோர் இல்லம் இடம்பெயர்ந்து வதிரிதேவரையாளியில் செயற்பட்டு வந்தது. 95 பேருடன் கூடிய இந்த முதியோர் இல்லம் மாங்குளத்தில் உள்ள கன்னியாஸ்திரிகள் மடத்திற்கு இடமாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



### மீண்டும் சமாதான

# பேச்சுவார்த்தையை தொடங்க தென்னிந்திய திருச்சபை முயற்சி

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ள இலங்கைக்கு தனது தூதுக்குழுவொன்றை அனுப்புவதற்கு தீர்மானித்திருக்கும் தென்னிந்தியத் திருச்சபை, இலங்கை நெருக்கடிக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்கு அரசாங்கத்தை தூண்ட நல்லெண்ணங்களை பயன்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையிடமும் உலக திருச்சபைகள் பேரவையிடமும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

போரின் காரணமாக இடம் பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை செய்வதற்காக உலகம் பூராவுமுள்ள அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களை அனுமதிக்குமாறு தென்னிந்தியத் திருச்சபை இலங்கை அரசாங்கத்திடமும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

### குருமார் பேரவையின் சரியான நிலைப்பாடு

தென்னிந்தியத் திருச்சபையின் வெள்ளிவிழா கூட்டத் தொடரை முன்னிட்டு தமிழ் நாட்டின் கோயம்புத்தூர் நகரில் நடைபெற்ற 6 நாள் மகாநாட்டிலேயே திருச்சபையின் கொள்கை வகுக்கும் அமைப்பான 'குருமார் பேரவை' இவை தொடர்பான தீர்மானங்களை மேற்கொண்டது. இம்மகாநாட்டில் பல் வேறு நாடுகளிலும் இருந்து வந்த 400க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இலங்கை இன' நெருக்கடிக்கு பேச்சுவார்த்தைகள் மூலமான சமாதான இணக்கத் தீர்வினைக் காண்பதற்கு உதவுவதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ள தென்னிந்தியத் திருச்சபை முன் வருகிறது. இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்க திருச்சபை இலங்கையின் வட பகுதிக்கு அதன் தூதுக்குழுவொன்றை அனுப்பவிருக்கிறது. இராணுவத் தீர்வினை விடுத்து சமாதான ரீதியான அரசியல் தீர்வைக் காணும் போக்கை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தைத் தூண்ட ஐ.நா.வும் உலக திருச்சபைகள் பேரவையும் நல்லெண்ணங்களை பயன்படுத்த வேண்டும்' என்று திருச்சபையின் 'குருமார் பேரவை' அதன் தீர்மானத்தில் தெரிவித்திருக்கிறது.

குருமார் பேரவையின் முதல் தலைமை அலுவலரான வண. பிதா வசந்த பி. டானின் கருத்துத் தெரிவிக்கையில்; 'சமாதான ரீதியான இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கு உதவும் எமது நடவடிக்கைகளில் நாம் எந்தத் தரப்பினருடனும் பக்கம் சாரப் போவதில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைதியையும் நிம்மதியையும் கொடுப்பதற்காக ஒரு சேவையாகவே மனிதாபிமான நோக்குடன் இதை செய்ய முன் வருகின்றோம்' என்றார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் அரசியல் சார்பற்ற மூன்றாம் தரப்பினர் உதவினால் அது விரும்பத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும். ஏனென்றால் எமது திருச்சபை அனுப்ப உத்தேசித்திருக்கும்தூதுக்குழுவின் பக்கச் சார்பற்ற தன்மையில் இருதரப்பினருமே நம்பிக்கை வைத்துச் செயற்பட முடியும் என்று உதவி தலைமை அலுவலரான வண. வில்லியம் மோசஸ் தெரிவித்தார்.

(இந்து)

# அர்த்தமில்லாத பயிற்சிகள்

வடக்குக்-கிழக்கு யுத்தம் பல்லாயிரக்கணக்கான மக்களை இடம் பெயர வைத்துள்ளது. வடக்கில் இருந்து இராணுவ நடவடிக்கைகளால் வெளியேறியவர்கள் நிரந்தர அகதிகளாகியுள்ளனர்.

சூரியப்பிரகாச இராணுவ நடவடிக்கையின் விளைவுகளால் பாதிக்கப்பட்டவர்கள் மூச்சுவிட முன்னர் இப்பொழுது சூரியகிரகண நடவடிக்கை தொடர்கின்றது. கிழக்கு மாகாணத்திலும் இப்பொழுது அகதிகள் தொகை பெருகுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் தென்பகுதி, அம்பாறை மாவட்டத்தின் வடபகுதி மக்கள் பாதிப்படைந்துள்ளனர். விமானக் குண்டு வீச்சு, ஷெல்லடி, தொடர்வதால் உயிரிழப்புகளுடன் பெருந்தொகையான வீடுகளும் சேதமடைந்துள்ளன.

இதுவரை காலம் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்கள் காரணமாகச் சுமார் 88 ஆயிரம் வீடுகள் பாதிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. 1990ம் ஆண்டின் முன்னர் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் சுமார் 33 ஆயிரம் வீடுகளும் அதன் பின்னர் 55 ஆயிரம் வீடுகளும் சேதமடைந்துள்ளன.

ஒருபுறம் இராணுவ நடவடிக்கையினால் அழிவுகளும் மறுபுறம் புனர் வாழ்வு புனரமைப்பு முயற்சிகளும் நடைபெறுகின்றன. புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு பதினைந்தாயிரம் ரூபா மானிய அமைப்புத் திட்டத்தின்கீழ் 16,409 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

கோடிக்கணக்கான பணச் செலவில் வீடமைப்பு மறு வாழ்வு முயற்சிகள் தொடர இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக இடம் பெயர்வுகளும் அழிவுகளும் தொடர்வது அர்த்தமில்லாத பயிற்சியாகக் காணப்படுகின்றது.

மக்கள் வட-கிழக்குப் பிரதேசங்களில் 'எரிமலையின் விளிம்பில்' இருப்பது போன்ற நிலையில் வாழ்கின்றனர். சமாதானம் பேச்சுவார்த்தை என்ற குரலோடு இராணுவ முனைப்புகள் பல்லாயிரக்கணக்கான மக்களை இடம் பெயர வைத்து உயிரிழிவுகளைத் தொடர்வதை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கணக்கிலெடுப்பதாகத் தெரியவில்லை

இருதரப்பும் 'விம்புகளில்' இருந்து இறங்காது அர்த்தமில்லாத போரைத் தொடர்வதைத் தடுப்பது யார் கையில் இருக்கின்றது? தேசிய சமாதான சபை விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தவும் யுத்தத்தை நியாயப்படுத்தவும் ஒரு கருவியாக தீர்வுத் திட்டத்தை பயன்படுத்த முயல்வது விவேகமற்ற செயல் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்பும் மோதலை விலக்கிப் பேசும் சூழ்நிலை தோன்றாத வரை சமாதானத்தைப்பற்றி எவரும் மூச்சு விடக்கூட முடியாது.

## பருத்தித்துறை ஆதார மருத்துவமனை : மலர் வலயம் ஆகுமா ?

### அரசிடமிருந்து உரிய பதில் இல்லை !

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை (மந்திகை) சூழவுள்ள பகுதியை பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்துமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள் தொடர்பாக கொழும்பு உயர்மட்டத்திடம் இருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை.

சாலையில்கடந்த எட்டு ஆண்டுகளாக வைத்திய தேவைகளை வழங்கிவரும் பிரான்ஸ் வைத்திய குழுவினர் வைத்திய சாலை வளவை மாத்திரம் பாதுகாப்பு வலயம் என விளம்பரப் பலகைகளை வைத்து எல்லைகளில் தொங்கவிட்டுள்ளனர்.

யாழ், போதனா வைத்தியசாலையின் பிரிவுகளிலும் உபகரணங்களிலும் ஒரு கணிசமான பகுதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன.

யாழ், போதனா வைத்தியசாலையைச் சூழவுள்ள பகுதி இராணுவத்தினர் யாழ், நகருக்குள் பிரவேசிக்க முன்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் பாதுகாப்பு வலயமாக பேணப்பட்டு வந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் பாதுகாப்பு வலயமாக பேணப்பட்டு வந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் அதன் யாழ் அலுவலகத்தை பருத்தித்துறைக்கு மாற்ற மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது.

கொழும்புக்குச் சென்றிருந்த யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி ந. கனகரத்தினம் பருத்தித்துறையில் இயங்கி வரும் யாழ். போதனா வைத்தியசாலையையும் அதன் சுற்றாடலையும் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்துமாறு சுகாதார அமைச்சு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றைக் கேட்டுக் கொண்டதுடன் பாதுகாப்பு வலயத்துக்குரிய வரைபடத்தையும் சமர்ப்பித்திருந்தார். அவ்வேளை, இது குறித்து ஆவன செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை பருத்தித்துறை ஆதார வைத்திய

# இஸ்ரேலிய விமானங்கள் வருகை!

தமிழ் மக்கள் மீதான பாரிய நடவடிக்கையின் ஒரு கட்டத்தை அரசு முடித்து விட்டிருக்கிற நிலையில் இவ்வருடத்தில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் பல நடத்தப்படவிருப்பதாக பாதுகாப்பு வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன. என்றபோதும் இவற்றால் ஏற்பட இருக்கும் அழிவுகள் வெளித்தெரியாமல் இருப்பதற்காகவும் உலகநாடுகளின் அவதானத்திலிருந்து தப்புவதற்காகவும் இவ் இராணுவ நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் முடித்ததன் பின் கால இடைவெளிவிட்டே நடத்தவும் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இவ்இராணுவ நடவடிக்கைகளுக்காக தற்பொழுது அதிகளவு ஆயுதங்கள் சீனா, செக்கோஸ்லாவாக்கியா, தென்னாபிரிக்கா, இஸ்ரவேல் ஆகிய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைவதால் கொழும்புத் துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் பலத்த காவலும், கண்காணிப்பும் போடப்பட்டுள்ளன. குறிப்பாக கோட்டை கொச்சிக்கடை மீன்கடை, கொட்டாஞ்சேனை முகத்துவாரம், மட்டக்குளி போன்றபகுதிகளில் அதிகளவு இரகசிய பொலிஸாரையும் படையினரையும் சேவையில் ஈடுபடுத்தியுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்திற்குள்ளே கடும் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக உள்ளே தொழில்புரியும் பலர் தெரிவிக்கின்றனர். ஜனவரி முதல் வாரத்தில் மட்டும் நான்கு கப்பல்கள் நிறைய ஆயுதங்கள் வந்திறங்கியதாகவும் தெரிகிறது.

அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டவற்றில் முக்கியத்துவம்வாய்ந்ததாக பாதுகாப்பு துறையினர் கருதுபவை இரண்டு இஸ்ரேலிய விமானங்கள். அதிலொன்று ("Keeper") வர்க்கத்தைச் சேர்ந்த விமானம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விமானத்திற்கு இலங்கை அரசாங்கம் "சிங்க பெட்டியா" (சிங்க குட்டிஎன்ப் பெயரிட்டுள்ளது) இவ்விமானம் நிலத்திற்கு அடியில் உள்ள பங்கர்களிலும் கொங்கிறீட் கட்டிடங்களையும் இலகுவாக அழித்து நாசம் செய்யக்கூடிய வசதிகள் படைத்துள்ளது. இந்த விமானம் 20mm பீரங்கி ரொக்கட்டுக்கள், மிசைல் என்பனவற்றையும்உள்ளடக்கியுள்ளது. இவ்வகையான 6 விமானங்களை அரசு கொள்வனவு செய்துள்ளது.

இதைவிட "Trone" ட்ரோன் வர்க்க விமானங்களும் இஸ்ரேலில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் எத்தனை விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்பது சரியாகத் தெரியவரவில்லை. ஆனால் இவ்வகை விமானத்தையும் இலங்கை கொள்வனவு செய்யும் முதற்தடவை இதுவேயாகும்.

இவ்விமானத்தின் விசேட அம்சம் யாதெனில் விமான ஓட்டிகள் இன்றி இதனை செலுத்தக்கூடிய வசதிகள் உள்ளமை. இதற்கு என்று ஒன்று கட்டுப்பாட்டு அறை இருந்தாலே போதுமானது. ஆகாயத்தில் பறந்து கொண்டே தேவையானஇடங்கள்புகைப்படங்களைப்பிடித்து கட்டுப்பாட்டு அறைக்குஅனுப்பக்கூடிய வசதிகளும்கொண்ட இவ்விமானம் விடுதலைப் புலிகளின் இருப்பிடத்தை சரியாக இனம் காண அதிகம் பயன்படும் என பாதுகாப்புத் துறையினர் நம்புகின்றனர்.

சென்ற டிசம்பர் மாதம் கடைசிப் பகுதியில் விமானங்களின் சாகசங்களை அறிவதற்காக வவுனியா சென்றிருந்தார் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, இவருடன் பாதுகாப்பு அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். விமானத்தில் பெறப்படும் புகைப்படத்தைப் பற்றிக் கூறுவதாக இருந்தால் அது புகைப்படக் கருவிக்கு அகப்படும் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதியில் செல்லும் மோட்டார் சைக்களின் தகடு இலக்கத்தைக்கூட தெளிவாகக் காட்டும் என இதில் கலந்து கொண்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துக் கொண்டார். இதைக் கட்டுப்படுத்தும்கட்டுப்பாட்டு அறை ஒரு கொள்கலன்அறை போன்றது. இக்கட்டுப்பாட்டு அறையில் இருந்து கொண்டே விமானம் எத்தனைஅடி உயரத்தில் பறக்க வேண்டும். எந்தப் பகுதியை புகைப்படம் பிடிக்க வேண்டும் என்பனவற்றை திட்டமிடலாம். சென்ற வருடம் மாத்திரம் இலங்கை விமானப் படைக்கு சொந்தமான ஆறு விமானங்களை இலங்கை அரசாங்கம் இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நன்றி: 'சரிநிகர்'

படிப்பகம்

www.padippakam.com

# "என்னையும் தென்னையையும்..."

- செல்வி அமல புஷ்பம் -

சிறுகதை

விஷ்ணுவால் எதையும் நம்ப முடியவில்லை. தான் நின்ற பூமி, தான் வாழ்ந்த மனை, இருந்த நிலம் தானா? என்ற கேள்விக் குறியோடு பார்த்தான். அவன் பிறந்து வளர்ந்த அந்த அழகான அடக்கமான வீடு. தாய் கௌசல்யா அவன் விளையாடுவதற்கென்று பார்த்து பார்த்து அமைத்த வண்ண மலர்த் தோட்டம், அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் மல்லி கைப்பந்தல் இருக்கை, தந்தை அவனுக்காக கட்டிக் கொடுத்த சங்கிலி ஊஞ்சல் என்று எதை எதையோ அங்கு தேடி அவன் ஏமாற்றம் அடைந்தாலும், ஒன்றை மட்டும் இன்னும் அவன் கண்கள் நம்பிக்கையோடு விசாலமாய் தேடிக் கொண்டிருந்தன.

அதோ...! அதோ...! அவன் தேடிய பொருள்...அந்தக் கட்டாந்தரையில் கருகிய நிலையில்...ஒரு மூலையில்...! ஒரு கணம் அவன் இதயமே செயலற்றுப் போனதுபோல உணர்வு ஏற்பட்டது. கணகுமூளமாயின, பதினைந்து வருடங்களுக்கு முன் நினைவுகள் பறந்தன; கண்ணீர் திரையிலும் அந்தச் சித்திரம் தெளிவாக ஓடியது!

அவனுக்கு அப்பொழுது பத்து வயதுதான்; இன்று அவன் கட்டாந்தரையாகக் காணும் அவன் சொந்த நிலம் அன்று சொர்க்க பூமி, அவன் பிறந்து ஆனந்தமாய் வளர்ந்த வீடு அமைந்த பூமி.

ஒரு நாள் மல்லிகைப் பந்தல் இருக்கையில் அமர்ந்து அம்மாவிடம் பாடம் கற்றுக் கொண்டிருக்கும் போது விஷ்ணுதான் ஏதோ நினைவாகச் சொன்னான். "அம்மா... எனக்கு...இந்த ரோஜாப்பூ செடியைத்தான்...நிறையப் பிடிச்சிருக்கு, ஏன் தெரியுமா? அதுதான் உங்களுக்கு தலையில் வைச்சுக்கொள்ள எந்த நாளும் பூ தருகுது" என்று சொல்லி விட்டு சிரித்தவன் திருப்பிக் கேட்டான் தாயிடம்... "என் அம்மா உங்களுக்கு எந்த மரம் பிடிச்சிருக்குது?" மகனின் இந்தக் கேள்விக்கு தன் கண்ணெதிரே அவனைப்போல் இளம் கன்றாய் செழிப்போடு முதன் முதலாய் பூத்துக் காய்த்து குலை குலையாய் களித்துக் கொண்டிருந்த அந்த இளம் தென்னையைப் பார்த்தபடி கூறினாள் கௌசல்யா.

"அதோ! அந்த தென்னை மரம்தான் எனக்கு நிறையப் பிடிச்சிருக்கு. ஏன் தெரியுமா? இந்த ஈழத் தாயினுடைய மடியினில் நீ பிறந்தபோது நீ குளிச்ச தண்ணியிலதான் நான் இந்த தென்னைய வளர்த்தன் இப்ப பாத்தியா வளர்ந்த இந்த மரம் எந்தவித பலனையும் எதிர்பார்க்காம நமக்கு எப்படியெல்லாம் பயன் தரப் போகுதென்று! இந்த மரம் உனக்கு எப்பவும் ஒரு நல்ல உதாரணமாக இருக்க வேணும் என்று தான் உன்னோடு சேர்த்து இந்த தென்னையையும் வளர்த்தன் இது எல்லா விதத்திலேயும் மக்களுக்கு நன்மை பயக்கிற ஒரு கற்பகத்தருவா இருக்கிற மாதிரி இந்த மண்ணில் பிறந்த நீயும் வருங்காலத்தில இந்த மண்ணுக்கும் நமது மக்களுக்கும் எல்லா விதத்திலயும் ஒரு கற்பகத்தருவா விளங்க வேணும். இதுதான் இந்த அம்மாவினுடைய ஆசை" என்று அவனை முத்தமிட அவன் சிறுபிள்ளைத் தனமாக இருந்தாலும் அவனிடமும் தெளிவு இருந்தது. உறுதி தெரிந்தது. ஏனோ கௌசல்யாவும் வேறு தென்னை எதையும் வைக்கவில்லை.

அதன் பின் இரண்டு மூன்று வருடங்கள் கழித்து அவன் தந்தைக்கு கொழும்பிற்கு வேலை மாற்றம் ஆக, தென்னை மரத்தை பிரிய முடியாமல் பிரிந்து சென்றனர். அவனுடைய படிப்பும் கொழும்பிலே தொடர்ந்தது. இங்கே சொந்த ஊரில் ஆங்காங்கே கொஞ்சம் கொஞ்சமாக அப்போது ஆரம்பித்திருந்த இனப் பிரச்சனை அவன் மேல்படிப்பு, படிக்கும் பொழுது விஸ்வரூபம் எடுத்தது. ஊரில் செல்அடி அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் எங்கெங்கோ பிரிந்து அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் செய்திகள் வந்தன. விஷ்ணுவுக்கு வேதனையாகத்தான் இருந்தது. அந்தத் தென்னை மரம் கண்ணுக்குள் நிழலாடியது. ஆனால் அம்மாவோ அன்று கொழும்பிற்கு வந்தவுடன்கூறி விட்டாள் அவனுடைய இலட்சியம் நிறைவேறிய பிறகுதான் மறுபடி ஊருக்கு போவதென்று! அதனால் விஷ்ணுவால் ஒன்றும் செய்ய முடியவில்லை, தன் இலட்சியத்தை நோக்கி மேலும் முன்னேறினான்.

அவன் அவசரமறிந்தது போல நாட்களும் வேகமாக உருண்டன. இப்பொழுது விஷ்ணு ஒரு திறமையான டாக்டர். அவன் இலட்சியம் நிறைவேறி விட்டது. ஆனால் சந்தோசத்தோடு அவனுக்கு சோகமும் கூடி வந்தது. அவன் தன் இலட்சியத்தை அடைந்த பொழுது அவன் தாயின் விதி முடிந்து விட்டது. அவன் உயிர் பிரியு முன்னம் கடைசியாக விஷ்ணுவிடம் கூறியது "விஷ்ணு நீ இனி ஊருக்கு போய் எல்லாரையும் பாரு. ஆனா எந்தக் காரணத்தாலயும் எப்பவும் அந்த தென்னைய மட்டும் அழிச்சிடாத விஷ்ணு" அதுதான் அவளின் கடைசி வார்த்தைகள்.

விஷ்ணு அழுதான். தவித்தான். தாயின் கடமைகளை முடித்துவிட்டு ஊருக்கு பறந்து வந்தான். ஆனால் இங்கு அவனுக்கு "அவன் சொந்த நிலத்தையே கண்டுபிடிக்க முடியவில்லை" இராணுவத்தின் அக்கிரமத்தால் ஊர் அப்படி சுடுகாடாய் மாறியிருந்தது. தமிழர்கள் யாரும் இல்லை. ஆங்காங்கே முஸ்லிம் தலைகள் மட்டும் தெரிந்தன. அவனை யாருக்கும் அடையாளம் தெரியவில்லை. தந்தை ரவிக்குமாரின் பெயரை சொன்னான் புரிந்து கொண்டார்கள். அவன் வாழ்ந்த நிலத்தையே அவர்கள் அவனுக்கு அடையாளம் காட்ட வேண்டி இருந்தது. சிரித்துக் கொண்டான். அவன் தேடிய தென்னை இப்போது கருகிய நிலையில்...!

கடந்த கால நினைவுகளிலிருந்து விடுபட்டான் விஷ்ணு. கண்ணீரோடு அந்த கருகிய தென்னை மரத்தை தடவினான். சின்ன வயதில் எத்தனை முறை அதை ஆசையோடு தழுவியிருப்பான்...தாய் அடிக்க வந்தால் அதன் பின் ஓடி ஒழிந்திருப்பான். தாயின் நினைவு வந்தது...! கண்ணீரோடு கூறினான் விஷ்ணு... "அம்மா...நீங்க வளர்ந்த இந்த தென்னை மரம் அக்கிரமத்துக்கு பலியாகிவிட்டது. ஆனா நீங்க நெஞ்சுரமா வளர்த்த இந்த மனித மரம் இன்னும் இன்னும் அழியல்லம்மா... இந்த ஒரு தென்னை மரத்தத் தான் என்னால காப்பாத்த முடிய இல்ல...ஆனா இன்னைக்கு இந்த தென்னைமரம் பலியாகிட்டாலும் அது காட்டின உதாரணம் என்றைக்கோ என் நெஞ்சில பதிஞ்சிட்டதம்மா. அதனால எத்தினையோ உயிர்கள இப்ப என்னால காப்பாத்த முடியும். இன்டையில இருந்து துன்பப்பட்டு, கஷ்டப்பட்டு, நாதியற்று நடுத்தெருவில அல்லல் உறும் எமது மக்களுக்காக என் சேவைகளையும் என்னாலான எல்லா உதவிகளையும் செய்யப் போகிறேன்" என்று கூறி கண்ணீரைத் துடைத்து விட்டு உறுதியோடு எழுந்திருந்தான் விஷ்ணு!

நல் ஆட்சி புரிந்து பல வெற்றிகளைக் குவித்த வீரன் சோழ மன்னன் விஷ்ணுவர்த்தனின் நினைவாகத்தான் அவனுக்கு விஷ்ணுவர்த்தன் என்று பெயர் வைததார்கள் அவன் பெற்றோர். இதோ இந்த ஈழத்து விஷ்ணுவர்த்தனும் புறப்பட்டு விட்டான் தமிழ் இனம் காக்க! தமிழ் தாயகம் நோக்கி!

# ஒரு குறளை உணர்வோம்

## அவாவும் தவாவும்

-"அருணோ"-

"அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்"

-திருக்குறள் : 367

பரிமேலழகர் : அவாவினை ஆற்ற அறுப்பின்-ஒருவன் அவாவினை அஞ்சித் துவரக் கெடுக்க வல்லனாயின்; தவாவினை தான் வேண்டும் ஆற்றான் வரும்- அவனுக்கு கெடாமைக்கு ஏதுவாகிய வினை தான் விரும்பும் நெறியானே உண்டாம் என்றவாறு.

கெடாமை-பிறவித் துன்பங்களான் அழியாமை. அதற்கு ஏதுவாகிய வினை என்றது, மேற்சொல்லிய துறவறங்களை. 'வினை' சாதியொருமை. தான் விரும்பும் நெறி, வருந்தா நெறி. அவாவினை முற்ற அறுத்தானுக்கு வேறு அறஞ் செய்ய வேண்டா, செய்தன எல்லாம் அறமாம் என்பது கருத்து.

இதனான் அவாவறுத்தல் சிறப்பு கூறப்பட்டது.

மணக்குடவர் : ஆசையை மிகவும் போக்குவானாயின், கேடில்லாத வினை தான் வேண்டின நெறியாலே வரும் என்றவாறு.

பரிதியார் : ஆத்மாவுக்கு வினையான ஆசையை விடுப்பானாகில், தவமான காரியம் தான் நினைத்தபடியே வரும் என்றவாறு.

காலிங்கர் : அவாவினை ஒன்றின்கண் வளராது ஒன்றின் கண் தவிராது, மற்றவையும் இங்குச் செய்தவினை இறுதிக்கண் கெடும் என்பது கருதி, மற்றதனால் கேடில்லாத நேர்ச்சியாகிய தெளிவுணர்வானது பின்பு ஒரு வருத்தம் இன்றித் தான் நினைந்தாங்கு வந்தெய்தும் என்றவாறு.

ஆற்ற என்பது மிகவும் என்றது. தவாவினை என்பது கெடாத விசாரம் என்றது.

டாக்டர் மு.வ. : ஒருவன் ஆசையை முழுதும் ஒழித்தால், அவன் கெடாமல் வாழ்வதற்கு உரிய நல்ல செயல் அவன் விரும்புமாறு வாய்க்கும்.

அவாவினை, தவாவினை என பொருள் பொதிந்த இரு சொற்களைக் கையாள்வதன் மூலமே இக்குறட்பா மூலம் தாம் கூறவந்த கருத்தை அருமையாகக் கூறிவிடுகிறார் திருவள்ளுவர். அவாவினை-ஆசைவாய்ப்பட்டுச் செய்யும் வினை. தவாவினை-தவிர்க்கவொண்ணாது ஆற்றும் வினை. இதில் அவா என்ற சொல்லே அவாவிநிற்பது, நிறைவேறாதது அல்லது என்றும் நிறைவு பெறாதது என்பதை உணர்த்தி நிற்பதைக் காணலாம். ஆக, அதைவிட்டுச் செய்யும் வினைகளும் நிறைவு பெறாததாகவே இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஆகவே, ஆசைபற்றிச் செய்யும் வினைகளை முடிந்தவரை குறைத்துக் கொண்டாலே போதும்; கெடாமைக்கு ஏதுவாகிய வினைகள், நிலைந்து நிற்கும் நற்செயல்கள் தான் விரும்பிய வண்ணம் கைகூடும் என்கிறார் குறளாசிரியர்.

போதை தரும் குடிப்பழக்கத்தை ஒழித்தால், ஊட்டந்தரும் பானங்களைத் தேடிக்குடிக்கும் பழக்கம் தானே வருந்தானே!

## இடர்பெயர்ந்த மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் மூலம் வீடுகள்

வலிகாமம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தங்கியுள்ள மக்களுக்கு 6 ஆயிரத்து 500 வீடுகளை அமைத்து கொடுக்க அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் (யு.என்.எச்.சி.ஆர்.) முடிவு செய்துள்ளது.

கொழும்பிலிருந்து வட பகுதிக்கு திரும்பிய அகதிகளுக்கான ஐ.நா. தூதரக யாழ். அலுவலக அதிகாரி பபியோ இந்த தகவலை தெரிவித்தார்.

மன்னாரில் 500 வீடுகள் அமைக்கும் பணி, அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் 6000 வீடுகளை அமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதே சமயம் யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் 3 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கு தேவையான கூரை பொலித்தின் எடுத்து வரப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# நின்று நிதானித்து செயல்பட வேண்டும்! வழி காட்டுவது யார்?

(கேயார்)

கோட்டை மத்திய வங்கிக் கட்டிடத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததும்அரசாங்கத்திற்கு பேரதிர்ச்சி தருவதுமான சம்பவமாகும் என அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தக் குண்டு வெடிப்புத் தாக்குதல்களினால் நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் காயம் அடைந்தும் உள்ளார்கள்.

கொழும்பு பல குண்டு வெடிப்புச்சம்பவங்களைப் பார்த்துவிட்டது. ஆனால் இதுபோல பெரியதொரு குண்டு வெடிப்புச் சம்பவத்தைப் பார்த்ததில்லை என மக்கள் கூறுவதாகவும் அறியப்படுகிறது.

## பழைய கஞ்சியா?

இது இப்படி இருக்க ஆறிய கஞ்சி பழைய கஞ்சி ஆகிய கதைபோல் இன்று யாழ்ப்பாணத்தின் நிலை என்ன? இனிமேல் யாழ்ப்பாணத்தின் நிலை என்ன? என்ற கேள்விகளும் எழுகின்றன.

இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை ஒடுக்குகிறோம் எனக்கூறி யாழ்ப்பாணத்தின் மீது மாபெரும் படையெடுப்பை நடத்தி அங்குள்ள மக்களை கொன்றொழித்து, அவர்களை இடம் பெயரச் செய்து இன்று வெற்றுக் கட்டடங்களையும் வெற்றிடங்களையும் தன்வசம் வைத்திருப்பதன் மூலம் என்னத்தை சாதித்து விடப் போகிறது?

இன்று யாழ்ப்பாணத்தை விட்டகன்ற தமிழ் மக்கள் வீதியோரங்களிலும், அனாதை மடங்களிலும், மரங்களுக்கு கீழேயும் இருந்து தங்கள் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாக போக்கடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு தேவையான உணவுப் பொருட்களையோ மருந்துப் பொருட்களையோ பிற பொருட்களையோ எந்தவொரு பொது ஸ்தாபனமும் எடுத்துச் செல்லக்கூடாது எனவும் சந்திரிகா அரசு பொதுதொண்டு நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது.

இந்த நேரத்தில் வானமே கூரையாகவும்; தரையை பாயாகவும் கொண்ட மக்களை உடனடியாக தமது சொந்த இடங்களுக்கு திரும்புமாறும் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

''குண்டி காய்ந்தால் பசி தானாக வரும் என்பார்கள்'' அதேபோல் சந்திரிகாஅரசும் இம்மாதிரி மக்களை உணவுப் பொருட்கள் எதுவும் அனுப்பாமல் பட்டினி போட்டால் தானாக தமது சொந்த இடங்களுக்கு திரும்புவார்கள் எனக் கணக்குப் போட்டுள்ளனர்.

## மாபெரும் தவறு

இதில் மாபெரும் தவறை மீண்டும் இலங்கை அரசு செய்து வருவதை நாம் காணக் கூடியதாக இருக்கிறது. இலங்கை அரசு நினைப்பதற்கு எதிராக ''நாம் ஏன் சிங்கள இராணுவத்தின் கைக்குள் போகவேண்டும்''.

''பட்டினி கிடந்து சாவதை விட புலிப்படையுடன் இணைந்து போரிட்டுச் சாவலாம்'' என பலரும் நினைப்பது அவர்களுக்கு தெரியாமல் இருக்க நியாயமில்லை.

இதனையும் சந்திரிகா அரசு ஒரு விதத்தில் ஈழத் தமிழர் தொகை குறைந்து போவதற்கு வழியாக இருக்கட்டும் என நினைக்கிறதோ தெரியவில்லை.

ஆக மொத்தத்தில் அதிகமாக அழிந்த, அழிகின்ற, அழியப்போவது தமிழர் தான் என்பது உலக நாடுகளுக்கு தெரியாமலும் இல்லை.

## போர் நீடிக்கலாமா?

சந்திரிகா அரசின் நரித்தனத்தையும், குள்ள தந்திரத்தையும் பாராட்டும் அமெரிக்கா போன்ற நாடுகள் அவர்களால் அழிகின்ற-அழிக்கப்படுகின்ற சிறுபான்மை இனம் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

உள்நாட்டில்தான் தமிழர்களை அங்கு வைத்து தமிழ்க் கட்சிகளும், அரசியல் வாதிகளும் பிழைப்பு நடத்துகின்றார்கள் என்றால் வெளிநாடுகளும் குறிப்பாக அமெரிக்காவும் ஈழத் தமிழனை வைத்து சந்திரிகாவுக்கு ''ஜால்ரா'' அடிப்பது எதையோ யோசிக்க வைக்கிறது.

மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் ஈழத் தமிழர் பிரச்சனைக்கு பேசி முடிவு காணலாம் எனவிடுதலைப் புலிகள் அறிவித்துள்ள இவ்வேளையிலும், மூன்றாம் உலக நாடுகளின் உதவி (சமரசத்துக்கு மட்டும்) தேவையில்லை என சந்திரிகா அரசு நிராகரிப்பதும் போர் நீண்டு போவதற்கே வழிவகுத்துள்ளது.

புலிகளுடன் சமாதானம் பேசியதும், சமாதானப் பேச்சு வார்த்தை முறிந்து போனதும், என்றுமே நடைபெற்றிராத போர் நடவடிக்கைகள் சந்திரிகா அரசின் அனுசரணையுடன் நடந்திருப்பதும், தற்போது அவற்றின் மூலம் சரியான பலன் கிடைக்காததும்,மீண்டும்போர் நடவடிக்கையை ஆரம்பிக்க முயற்சிப்பதும் ஏன் என்று சந்திரிகா அம்மையாருக்கு தெரியாமல் இருந்திருக்குமா?

அல்லது தேர்தலுக்கு முன்பாகவும், தேர்தலுக்கு பின்பாகவும் சந்திரிகா அம்மையார் நடந்து கொண்ட விதம் தமிழ் மக்களை நம்ப வைத்த கவர்ச்சி உடைந்து குறைந்து போனதன் மர்மம்தான் என்ன?

இந்தக் கேள்விகள் ஏன் என்றால் சந்திரிகா தானாக ஆடுகிறாரா? அல்லது ஆட்டுவிக்கப்படுகிறாரா என்ற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது.

## யார் வழி காட்டுவார்?

எது எப்படியோ, மக்கள் விரும்புவது அமைதியை; இது தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் பொருந்தும். ஆனால் அரசியல் வாழ்க்கை தொடர வேண்டியவர்களும், ஆயுத வியாபாரிகளும், வியாபார கமிஷன் ஏஜன்டுகளும் விரும்புவது தமது வியாபாரத்தைப் பெருக்கவே. எனவே அவர்களுக்குத்தேவை போர்வாழ்க்கை இதில் அகப்பட்டு மடிவது அப்பாவி மக்களே.

அரசியல் கட்சிகளோ, விடுதலை அமைப்புகளோ இதனை நின்று நிதானித்துப் புரிந்து கொண்டு வாழ விடுங்கள் மக்களை; நிம்மதியாக வாழவிடுங்கள் என்பதைத்தான் மக்கள் கேட்கிறார்களே தவிர, போர் தொடர வேண்டும் என்பதை அவர்கள் விரும்பவில்லை.

நின்று...நிதானித்து...செல்ல வேண்டும். யார் வழி காட்டுவார்கள்?

---

கிளிநொச்சியில்

# கிடுகு ஒரு சோடி 40ரூ பாயாக விற்பனை

கிளிநொச்சி மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் கிளாலி கடலேரியூடாகத் தொடர்ந்தும் இடம் பெயர்ந்து வருவோரின் தொகைக்கேற்ப அங்கு வந்து சேரும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் போதாமல் உள்ளதாகவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ். தில்லைநடராஜா தமது மாதாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரிசி ஒரு கிலோ 23ருபா, மா கிலோ 16 ருபா,சீனிரூ32.50சதம் பருப்பு 4ரூ 50சதம், 450கிராம் நிறையுள்ள பாண் 8ருபாஉள்ளூரில் விளையும் மரக்கறி வகைகள் கிலோ 60ருபா தொடக்கம் 80 ருபா, மீன் கிலோ80 தொடக்கம் 100ருபாவாக சந்தையில் விலைவாசிகள் இருக்கின்றன.

சூரியகதிர் இராணுவ நடவடிக்கையின் காரணமாக மட்டும் ஜனவரி முதலாம் திகதி வரையில் ஒருலட்சத்து 84ஆயிரத்து 876பேர் இடம்பெயர்ந்து வந்து கிளிநொச்சியில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

இதனால் பாடசாலை கட்டிடங்கள் இடம்பெயர்ந்தவர்களினால் நிரம்பி வழிகின்றன. வீடுகளிலும் பிறரோ குடியிருப்பாளர்களுடன் மேலதிகமாக இடம் பெயர்ந்தவர்களும் சேர்ந்து செறிந்து வாழ்கிறார்கள்..

கடந்த முதலாம் திகதி அரசு அறிவித்தபடி (1-1-96) பாடசாலைகளை மீண்டும் கல்வித் திணைக் களத்தினால் திறக்கமுடியவில்லை. இடம் பெயர்ந்தவர்கள் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளதனாலேயே இந்தநிலைமை ஏற்பட்டுள்ளது.

காட்டு வெள்ளம் போல பெருக்கெடுத்த மக்களின்இடம் பெயர்வு காரணமாக கிடுகுகளின் தேவை மலைபோல எழுந்துள்ளது. முக்கியதேவையாக விளங்குகின்ற கிடுகுகள் கிளிநொச்சியில் கிடைப்பதற்கு அரிதாகியுள்ளது.

ஒருசோடி கிடுகு ரூ30தொடக்கம் 40ரூபாவாக விற்பனையாகிறது. பனையோலை ஒன்றின் விலை 10 ,12 ரூபா.

இடம் பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள பாடசாலைகள் பல குடியிருப்புகளில் தூய்மையான குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் தூர இடங்களில் இருந்தே குடிநீரை பரல்களில் உழவு இயந்திரங்கள், மாட்டு வண்டிகளில் ஏற்றிவர வேண்டிய கஷ்ட நிலைமை அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

---

# செய்திச் சரம்

### 20-01-1996

புலித் தலைவர்களுக்குள் கடுமையான கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பிரபாகரனின் உத்தரவுப்படி புலிகளின் அரசியல் பிரிவுத் துணைத் தலைவர் கரிகாலன் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் இராணுவம் கூறியுள்ளது.

(தினமணி)

வடபகுதியில் உள்ள தமிழ் அகதிகளுக்கு டாக்டர்கள் அனைவரும் உதவ வேண்டும், மனித நேய அடிப்படையில் நாம் இதனைச் செய்ய வேண்டும் என்று நேற்று சந்திரிகா தனது அறிக்கையில் கூறியிருந்தார்.

(கதிரவன்)

### 21-01-1996

நேற்று தொப்பிகெல வனத்தில் தாராவிகுளம் என்ற இடத்தில் இராணுவத்தினர் ஹெலிகப்டரில் இருந்து தாக்குதல் நடத்தியதில் புலிகளின் கிழக்குப் பிரிவு கமாண்டர் கருணாவின் தலைமையிலான முகாம் அழிக்கப்பட்டது.இதில் 15 போராளிகள் . கொல்லப்பட்டனர், 20 போராளிகள் காயமடைந்தனர் எனவும் இராணுவ வட்டாரம் தெரிவிக்கிறது.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன், இந்து).

### 22-01-1996

அதிகார பரவல் திட்டநகலை இலங்கைஅரசு கடந்தவாரம் வெளியிட்டது. TELO, EPRLF, PLOT, EROS ஆகிய தமிழர் கட்சிகள் இது தங்களுக்கு மிகுந்த ஏமாற்றம் அளிப்பதாக அறிவித்துள்ளன. இந்த நான்கு கட்சிகளில் பிளாட்மட்டுமேநாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளை கொண்டுள்ளது. பிராந்திய கவுன்சிலை மத்திய அரசு கலைப்பது, சட்டம் ஒழுங்கு பிரச்சினை, மதம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் போன்ற அதிகாரங்கள் . தொடர்பாக திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் விருப்பம் வெளியிட்டுள்ளன.

(தினமணி, இந்து)

தென் மாநிலங்கள் வழியாக புலிகள் டில்லிக்கு ஊடுருவத் திட்டமிட்டுள்ளதாக தகவல் தெரியவந்துள்ளது. இதையடுத்து தென் மாநிலங்களை மத்திய அரசு உஷார் படுத்தியுள்ளது.

(தினமலர்)

### 23-01-1996

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகப்டர் யாழ்ப்பாண கடற்பகுதியில் பறந்து கொண்டிருந்தபோது நேற்று மாயமாக மறைந்துவிட்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். இதில் பயணித்த மூன்று இராணுவ அதிகாரிகள் உட்பட 39 பேர் நிலைகுறித்து தகவல் ஏதும் இல்லையென்றும் தெரியவந்துள்ளது. இதனிடையே இந்த ஹெலிகப்டரை வடக்கு பருத்தித் துறையில் சுட்டு வீழ்த்தியதாக புலிகள் தரப்பு வானொலிச் செய்தி தெரிவிக்கிறது.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன், இந்து)

நேற்று முன்தினம் நள்ளிரவு வெலிஓயா என்ற இடத்திலுள்ள கிராமத்தில் புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 2 சிங்கள பெண்கள், 15 போராளிகள், 5 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

(தினமணி, தினமலர், இந்து)

# 87 சூழ்நிலையை மீண்டும் உருவாக்கி இனப்பிரச்சினைக்கு தி.மு.க. உதவட்டும்

## கலைஞருக்கு சந்திரகாசன் கடிதம்

பெருமதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்.

திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 8-வது மாநில மாநாடுஎழுச்சியோடும் கிளர்ச்சியோடும் வெற்றிகரமாக நடந்து முடிந்த செய்தியினை ஏடுகளில் கண்டு இரும்பூதெய்தினோம்.

அதில் தாங்களும், பேராசிரியப் பெருந்தகையும், மற்றவர்களும் ஆற்றிய உரைகள் தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ் உலகிற்கும் புதிய தெம்பையும், வலுவையும் ஊட்டுவனவாகும்.

எம்து ஈழத் தமிழினத்தை மறவாது 'ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை தடுத்து, அவர்களைக் காத்திட இந்திய அரசு உடனடியாக முன்வர வேண்டும்' என ஐந்தாவது தீர்மானத்தில் வலியுறுத்தியிருப்பதும்-

'தமிழக மீனவர்கள் சிங்கள ராணுவத்தால் கொல்லப்படுவதைத் தடுக்காததைக் கண்டிக்கிறோம்' என ஆறாவது தீர்மானத்தில் கூறியிருப்பதும் வரவேற்கத்தக்கதாகும்.

### உலக அனுதாபம்

இந்திய அரசு தலையிடாமல் ஈழத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் நிற்பதோ, அவர்கள் தம் சொந்த மண்ணிலிருந்தே இடம்பெயர்ந்து அகதிகளாகும் அநியாயம் முற்றுப் பெறுவதோ நடவாது. அரச பயங்கரவாதத்தை மேற்கொண்டு சிறீலங்கா அரசுசெய்யும் இந்த அட்டூழியங்களுக்குப் பதிலடி கொடுப்பதாக நினைத்துக் கொண்டு, சென்ற முறை கொழும்பில் எண்ணெய்க் கிடங்குகளைத் தாக்கி எரியச் செய்ததும், இம்முறை 31-01-1996 அன்று மத்திய வங்கியைத் தகர்த்து பலர் மடியவும், ஆயிரக்கணக்கானோர் காயமுறவுமான தற்கொலைத் தாக்குதலை நடத்தியதும் போன்றவற்றைப் புலிகள் செய்யும்போது அது தமிழர்களின் பயங்கரவாதமாகச் சித்தரிக்கப்பட்டு, உலக நாடுகளின் கண்டனத்தையும் தமிழர் பக்கமே சேர்க்கிறது. ஆனால், சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தும் அரச பயங்கரவாதம் மறைக்கப்படுகிறது. அதனால்

அழிந்து கொண்டிருப்பதால் உலக நாடுகளின் அனுதாபத்தையும் ஆதரவையும் [illegible] தமிழ் [illegible] தம்மை அழிக்கும் சிங்களப் பேரினவாத ஆட்சியாளருக்கு அத்தகைய அனுதாபமும் ஆதரவும் கிடைக்க, தங்களை அறியாமலே காரணமாவது கொடுமையிலும் கொடுமையாகும்.

### இந்திய-இலங்கை உடன்பாடு

இந்தக் கொடுமையை இந்தியத்தலையீடுஒன்றினால் தான் தடுத்து நிறுத்த முடியும் என்பதால் தங்கள் தீர்மானம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். அத்தீர்மானத்தின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டும், பிற அரசியல் கட்சிகள், அமைப்புகளின் ஆதரவைத் திரட்டியும் இந்தியா தலையிட்டு தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வழிசெய்யத் தாங்களும், கழகமும் இடைவிடாத முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தங்களுடைய இடைவிடாத முயற்சியின் காரணமாகத்தான் 1987ல் இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்டதென்பதையும், வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலம் தமிழர் தாயகமாக ஒப்புக் கொள்ளப்பட்டு எழுந்தது என்பதையும், துரதிர்ஷ்டவசமாக அது தொடர்ந்து முன்னேறிச் செல்லாமல் இடைமுறிந்தாலும், அது போட்டதடம் பிரச்சினை தீர்வுக்கான ஒரு முன்மாதிரியாக இன்னும் விளங்குகிறது என்பதையும் எவரும் மறுக்க முடியாது.

### பாலஸ்தீனமும் தமிழீழமும்

எந்த மண்ணுக்கு உரிமை கோரினார்களோ, அந்த மண்ணில் தங்கள் மக்களே இல்லாமலிருந்த பாலஸ்தீனர்கள், இன்று இஸ்ரேலுக்குள் ஒரு பாலஸ்தீனத்தைப் பெற்று அங்கு ஒரு தேர்தலையும் நடத்தி முடித்துவிட்ட வரலாறு தமது கண் முன்பு நடந்துவிட்ட பிறகு இந்தியாவைக் கொண்டு இலங்கையிலும் அதை நிகழ்த்துவிக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

அதைப் போலவே ஈழச் சிக்கல் தீராமல் சிங்கள இராணுவத்தால் தமிழக மீனவர்கள் அவ்வப்போது தாக்கப்படுவதும் நிற்குமென்று தோன்றவில்லை. தமிழக மீனவர்கள் நலத்திற்கும், பாதுகாப்புக்கும் கூட இலங்கையில் இந்தியாவின் தலையீடுதான்-இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பது தான் நிரந்தரமான நடவடிக்கையாக அமையும்.

### [illegible]

ஆகவே, திருச்சி மாநாட்டின் எழுச்சியோடு கூடவே தாங்களும், தி.மு.க.வும் இதை மேலும் முன்னெடுத்துச் செல்ல, ஒரு பக்கம் அழிவாலும், மறுபக்கம் வேண்டாத அவப்பெயராலும் அல்லல்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் ஈழத் தமிழ் மக்களின் இன்னலைத் துடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்காகவும், அங்கு உருவான ஈழத் தமிழ் மக்கள் நலன் குறித்த ஆதரவு உணர்வுக்காகவும் ஈழத் தமிழினத்தின் சார்பிலும், தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதி மக்களின் சார்பிலும் உளமார்ந்த நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

-இவ்வாறு, ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத்தின் தலைவர் சா.செ. சந்திரகாசன், கலைஞர் கருணாநிதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

## பெருமளவு ஆயுதங்களை கைப்பற்றியதாக புலிகள் அறிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு (வெலிஓயா) பகுதியில் திங்கள் அதிகாலை இடம்பெற்ற மோதலில் பெருமளவு ஆயுதங்களைத் தாம் கைப்பற்றியிருப்பதாக விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளனர்.

சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு முன்னணிக் காவலரண்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சண்டையில் புலிகள் தரப்பில் காப்டன் அன்புச் செல்வன்என்பவர் இறந்துள்ளதாகவும் பாதுகாப்பு படை, தரப்பில் 7 வீரர்கள் பலியாகியிருப்பதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது,

இது இவ்வாறிருக்க, சுன்னாகம், கந்தரோடைப் பகுதியில் ஞாயிறு இரவும் திங்கட்கிழமைஅதிகாலையும் மோதல் இடம் பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது,

## எல்லாமே பேச்சுக்குத்தான்

''இனப் பிரச்சினைக்''கான அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வுச் சட்ட ஆவணம் விடுதலைப் புலிகளிடம் அதிகாரப் பூர்வமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தேசிய சமாதான சபை தனது அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசாங்கம் தீர்வுத் திட்டத்தை முறைப்படி சமர்ப்பிப்பதன் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் முக்கியமான அடியை எடுத்து வைத்துள்ளது. தீர்வுத் திட்டத்தின் பலமும் பலவீனமும் அடுத்துத் தொடரும் யதார்த்தங்களை உணர்ந்த அரச நடத்தையிலேயே தங்கியுள்ளது.

பேச்சுவார்த்தைகளைப் பொறுத்த வரையில் கரிகாலன் தெரிவித்த கருத்தும், அமைச்சர் ஜி எல். பீரிஸ் தெரிவித்த கருத்தும் இரு தரப்பினரும் அடுத்த கட்ட நிலைக்கு 'மனப் படுவதைச்' சூசகமாக உணர்த்த முனைகின்றது.

இரு தரப்பினரையும் ஒருவழிப்படுத்தும் முயற்சியில் 'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்ற நிலை உருவாகியுள்ளது போலத் தெரிகிறது. வெறுமனே அரசியல் யதார்த்தங்களை உணராது; இராணுவ முனைப்புகளுக்கும், அரசியற் கபட நாடகங்களுக்கும் வழிசமைக்கும் நடத்தைகளைத் தொடர்வது பயன்தரப் போவதில்லை.

அனைத்து நடவடிக்கைகளாலும் மக்கள் பலவீனப்பட்டுப் போயுள்ளனர். அரசாங்கம் பலவீனப்பட்டுள்ளதா, விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டுள்ளனரா என ''அரைத்த மாவை அரைக்கும்'' காரியத்தைத் தொடர்வது பயனற்றது.

'விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை' என்ற நிலைப்பாட்டுடன் இரு தரப்பும் பலப்பரீட்சைகளில் ஈடுபடுவதால் அழிவது உயிர்களும் உடைமைகளும் உணர்வுகளுமே என்பதைச் சற்று உர்த்துச் சிந்திக்க வேண்டும்.

இனிமேல் பிரச்சினைகளோடு சம்புந்தப்பட்ட இருதரப்பும் இணக்க முறையில் பேச அதிகம் இல்லை. பேசுவதன் மூலம் ஏற்படக் கூடிய இணக்கப்பாட்டை இருதரப்பும் ஏற்று நடத்த வலியுறுத்தும் மூன்றாவது தரப்போ தரப்புகளோ [illegible] ஏற்படுத்தும் [illegible] தோன்றாவிட்டால் ''எல்லாமே பேச்சுக்குத்தான்'' [illegible] மாகும்.



## யாழ்ப்பாணத்து மக்களின் இரங்கத்தக்க-நிலை!

ஜனவரி மாசமும் ஒரு அமைதியில முடியும் என்று பார்த்தா கடைசிக் கிழமையில் கொழும்பிலையும் பெரிய குண்டு வெடிச்சுட்டுது...

என்னது நான் வர முதலே உங்களுக்கு செய்தி வந்திட்டுது போல...

வாங்கோ சுப்பையாண்ணை உங்களத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறம்.

குண்டுதான் வெடிச்சுப் போட்டுது அங்கை இவ்வளவு பேர் செத்துப் போட்டினம் என்று ரி வி யிலையும் பேப்பரிலையும் பார்த்து நீங்கள் வேதனைப் படுவது எனக்கு விளங்குது.

இதே மாதிரித்தான் ஆமிக்காரங்கள் யாழ்ப்பாணத்தில் செய்த அட்டூழியங்களால ஆயிரக்கணக்கான மக்கள் இறந்து போனதும், இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து போனதும்இப்ப அவை படுகிற கஷ்டங்களும் வேதனைகளும் யாருக்குத் தெரியும்.

இதைநான் சொல்லுறதால நியாயப்படுத்திறன் என்று கொள்ளக்கூடாது. மனித உயிர்கள் மதிக்கப்பட வேண்டும், பேணப்பட வேண்டும் என்றதை தான் நான்விரும்பிறன்.

யாழ்ப்பாணத்தை இராணுவம் பிடித்து மூன்று மாதங்கள் முடியப்போகுது அங்கு சிவில் நிர்வாகம் ஆரம்பிக்கப்பட வேண்டும், ஆஸ்பத்திரி இயங்கப்பட வேண்டும் அதிகாரிகள் ஊழியர்கள் கடமைக்கு வரவேண்டும் என அரசாங்கமும் அதன் ஊதுகுழல்களும் நாள்தோறும் செய்திகள் வெளியிடுகின்றன.

இதுக்கு முன்னமும் அரசாங்கம் ஒண்டை மறந்து போட்டுது கண்டியோ.

பத்திரிகையாளர்களையும், பொதுத்தொண்டு நிறுவனங்களையும் யாழ்ப்பாணத்துக்குள் செல்லவிடாது தொடர்ந்தும் தடுத்து வரும் அரசாங்கம் எந்த முகத்துடன் மக்களை வா,வா என்று அழைக்கிறது?

செய்தித் தணிக்கை மூலம் எந்த விதமான செய்திகளையும் சரியாக மக்களைச் சென்றடையாமல் செய்த அரசாங்கம் செய்தித் தணிக்கை நீக்கப்பட்ட பின்னரும் உள்ளூர் பத்திரிகையாளரோ, வெளிநாட்டு நிருபர்களோ சுதந்திரமாகச் சென்று வருவதற்குரிய வாய்ப்பை கொடுக்கவில்லை. இராணுவத்தினரும் பாதுகாப்பு என்ற காரணத்திற்காக பத்திரிகையாளர்களை அனுமதிக்கிறார்கள் இல்லையாம்.

அரசியல் வாதிகள் மக்கள் திரும்பிச் செல்ல வேண்டும் புனர் வாழ்வு புனர் நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றன என அறிக்கைகளை வெளியிடுகிறார்கள்..

மக்கள் நன்றாகக் கஷ்டப்பட்டுப் போயுள்ளார்கள். அவர்களுக்கு போதிய பாதுகாப்பில்லை. சரியான உணவு மருந்து வகைகள் இல்லை இந்த நிலையில் அவர்களுக்குரிய சரியான நிலைப்பாட்டினை அரசாங்கம் செய்யாமல் அவர்களை மீண்டும் தமது சொந்த இடம் [illegible] கமல!

www.padippakam.com



# மாணவர்களின் கல்வியும், ஒழுக்கமும்

கல்வி என்னும் சோலையில் அறிவு என்னும் பசுமையை தேடும் வண்ண மயில்கள் மாணவர்கள்! ஒதலினும் மிகச் சிறந்தது ஒழுக்கம் என்பதனையும் மாணவர்கள் நன்கு உணர்ந்து கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்! ஒழுக்கம் இல்லாத கல்வி உப்பில்லாத உணவைப் போன்றது. ஒளி யிழந்த நிலவைப் போன்றது. ஒழுக்கம் என்பதில் நற் பழக்கங்கள் யாவும் அடக்கம். எனவே மாணவர்கள் ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்வதோடு கல்வி எனும் கலை மிகு கனியை எட்ட முயல வேண்டும்.

ஆம். கல்வி என்பது ஒரு நல்ல மரத்தின் கனி. 'அது அரும்போடு கருகிவிடாமல், பூவோடு உதிர்ந்து விடாமல், பிஞ்சோடு கொட்டி, காயோடு வீழ்ந்து விடாமல் கனியாய் பறிக்க முயற்சிக்க வேண்டும். இதற்கு மாணவர்களின் பெற்றோர்களும் கூட அவர்களுக்கு பெரும் உறுதுணையாக இருக்க வேண்டும் அப்போதுதான் அந்தக் கனியை பறிப்ப வரும் பயனடைவதோடு, அந்தக்கனியின் விதையில் இருந்து இன்னும் ஒரு மரம் உருவாகும். அதுவும் பல கனிகளைக் கொடுக்கும் நாட்டுக்கும், வீட்டுக்கும் சமுதாயத்துக்கும் நன்மை பயக்கும்!

தமிழ் நாட்டில் முகாம்களில் வாழ்கின்ற மாணவர்களும் சரி, வெளியில் வசிக்கின்ற நமது மாணவர்களும் சரி, வெளி யில் வசிக்கின்ற நமது மாணவர்களும் சரி ஒன்றை உணர வேண்டும்!

ஈழத்தில் நமது தமிழ் மாணவர்களின் நிலையை எண்ணிப் பார்ப்போமானால் அவர்கள் பல பொருட்செல் வத்தை இழந்த நிலையிலேயே இன்று வாழ்ந்து கொண் டிருக்கிறார்கள் அதேசமயம் எந்தக் காரணத்தாலும் இழக்க முடியாத கல்விச் செல்வத்தைப் பெற முடியாமலும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்குச் செல்லுகின்ற பாதி வழியிலேயே பல மாணவர்களின் விதி முடிந்து விடுகிறது. சொந்த மண்ணிலேயே இந்த சோக நிலை நெஞ்சை உருக்குகிறது.

ஆனால் நாம் கடல் கடந்து வந்து இந்த நாட்டில், அகதிகளாக முகாம்களில் வாழ்ந்தாலும் ஈழ ஏதிலியர் மறு வாழ்வுக்கழகம் நமது மாணவர்களின் முன்னேற்றம் நன்மை கருதி அவர்களின் முன்னேற்றம் நன்மை கருதி அவர்களின் நலனில் பெரும் அக்கறை செலுத்தி கல்விக்காக அவர் களுக்கு பல உதவிகளையும் பல வசதிகளையும் செய்து கொடுத்துக் கொண்டிருப்பது போற்றுதற்குரியது.

எனவே அந்த உதவிகளை வசதிகளை பெறுகின்ற மாணவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து கல்வியிலே மேன்மை பெற்று நாளை நாடு திரும்பும்போது நல் அறிவுச் செல்வங்களாக திரும்ப வேண்டும்!

இளம் மாணவர்கள் தவறான பழக்க வழக்கங்களில் அகப்பட்டுக் கொள்ளாமல் சிந்தித்து செயல்பட வேண்டும். அன்னம் நீரில் இருந்து பாலை மட்டும் உறிஞ்சிக் கொள் வது போல நல்லதை நினைத்து, நல்லதையே நாடி, நல்லதையே செய்ய வேண்டும்.

-இன்றைய மாணவர்கள் நாளைய பல துறைகளின் தலைவர்கள். நீங்கள் உங்கள் கனவுகள் நனவாக தொழிற் கல்வி ஆனாலும் சரி, ஏட்டுக்கல்வி அடிப்படை என்பதை மறந்துவிடாமல் படிக்கும் காலத்தை பொற்காலமாக மதித்து மனிதன் என்ற மேன்மையினை மேலும் மகத்துவமாக்கின்ற கல்வியினை ஒழுக்கத்தோடு கற்று உங்கள் வாழ்க்கையை வளமாக்குங்கள்.

ஒழுக்கத்தோடு-சேர்ந்த கல்வி
இறுதிவரை உயர்வு தரும்!
இறந்தாலும் பெயர் சொல்லும்
என்பதில் சிறிதும் ஐயமில்லை!

-செல்வி சித்திரா தேவசகாயம்

---

## "ஈழசுதந்திரன்" மாத இதழ் சந்தா விவரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில ரூ. 30-00
வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10
அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில், சந்தாசேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம் :

நிர்வாகி
"ஈழசுதந்திரன்"
14, செட் காலனி [illegible]
[illegible]
எழும்பூர், சென்னை-60[illegible] 008.

---

# தேர்வுதிட்டத்தை சந்திரிகா முன்வைப்பின் பரிசீலிப்போம் நாடகத்தை அனுமதியோம்!

## புலிகள் அரசியல் பிரிவு உபதலைவர் கரிகாலன் அறிவிப்பு

தமிழ் மக்களின் பிரச் சினை தொடர்பாகப் பொது ஜன ஐக்கிய முன்னணி அர சுக்கு உண்மையான அக்கறை யில்லை. நிரந்தர தீர்வை அரசு விரும்பவில்லை. போர்ச் சூழலை நீடிக்கவே விரும்பு கிறது. இந்திய அரசாங்கமும் இதற்கு அனுசரணையாக ஆயுதம் மற்றும் பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கி வருவதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு உபதலைவர் கரிகாலன் கூறி னார்.

மட்டக்களப்புபட்டிப்பளை பிரதேசத்திலுள்ள அரசடித் தீவில் உள்ளூர் பத்திரிகை யாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ் வாறு கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் எண்பது சதவீத நிலப்பிர தேசம் எமது கட்டுப்பாட்டி லேயே உள்ளது. ரிவிரச இராணுவ நடவடிக்கை யாழ்ப் பாணக் குடாநாட்டில் மேற் கொள்ளப்பட்ட போது 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் ஆட்லரி ஷெல் மற்றும் டாங்கிகள் கனரக ஆயுதங்களை பிர யோகிக்கும் போது விட்டில் பூச்சிகளாக நாம் பலியாக விரும்பவில்லை. அத்தோடு நாம் எதிர்தாக்குதல் மேற் கொண்டால் அப்பாவிப் பொது மக்கள் பலியாகும் நிலை உரு வாகும் என்பதாலேயே பின் வாங்கினோம்.

### மீண்டும் கைப்பற்றுவோம்

தந்திரோபாய ரீதியில் பின்வாங்கிய நாம் கெரில்லா தாக்குதல் மூலம் படையினரை நிலைகுலையச் செய்யும் நட வடிக்கைகளில் ஈடுபட்டுள் ளோம்.

யாழ்ப்பாணக் குடாநாட் டில் படையினர் கைப்பற்றிய தாகப் பறைசாற்றும்வலிகாமப் பகுதியில் இன்னமும் எமது முகாம்கள் உண்டு. கெரில்லா தாக்குதல் மூலம் மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்று வோம்.

புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்குடா 1981ஆம் ஆண்டு முதல் இருந்தது. அப்போது யாரும் எமது கட்டுப்பாட்டில் யாழ்ப்பாண பிரதேசம் வரு மென எதிர்பார்க்கவில்லை. கெரில்லா தாக்குதல் மூலமே அப்போது கைப்பற்றினோம்.

### அக்கறை இல்லாத அரசு

நீண்ட காலத்திற்கு படை யினரால் யாழ்ப்பாணக் குடா நாட்டைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது. படை யினரின் நிலைகளைத் தாக்கி யழிக்கும் பலம் எம்மிடமுண்டு, ரொன்றை வீழ்த்தியுள்ளோம். வெற்றிலைக் கேணியிலிருந்து பலாலி வரையான இராணுவ போக்குவரத்தை துண்டித் துள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் பொதுமக்கள் கூடுமிடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கு நாம் பொறுப் பல்ல. வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு அருகில் கடந்த செவ்வாய் மாலை மாட்டு வண்டியில் கண்டு பிடிக்கப்பட்ட குண்டுக்கும் எமக்கும் தொடர்பில்லை.

தமிழர் பிரச்சினையில் இந்த அரசுக்கு உண்மையான அக்கறையில்லை.

இலங்கை-இந்திய அரசு கள் பிரச்சினை நீடிப்பதையே விரும்புகின்றன.

### அன்றும் இன்றும்

ஜனாதிபதி சந்திரிகா பதவியேற்பதற்கு முன்னர் புலிகள் இல்லாமல் தீர் வில்லை என்ற கருத்தையே கொண்டிருந்தார். பிரதமராக இருந்தபோது பொருளாதார தடையை (யாழ் குடாமீதான) நீக்கவிரும்புவதாகவும்ஆனால் இராணுவத்தினர் விடுகிறார் களில்லை. ஜனாதிபதியாக வந்த பின் முப்படைகளும் எனது கட்டுப்பாட்டில் வரும். அப்போது நிச்சயம் செய் வேன் என்றார். இதனால் ஜனாதிபதி தேர்தலின்போது எத்தவித எதிர்ப்பையும் நாம் மேற்கொள்ளவில்லை.

நானும் விதவை. இத னால் வடக்கு கிழக்கிலுள்ள ஆயிரக்கணக்கான விதவை களின் கண்ணீர் கதைகளை உணர்வேன் என்றும் ஜனாதி பதி கூறினார்.

### ஒத்துழைப்பு

வடக்கு-கிழக்கில்அரசியல் ரீதியாக நிரந்தர தீர்வை ஏற் படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனேயே அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி னோம். ஆனால் அரசு தவ றான உள்நோக்கத்துடனேயே அதனை மேற்கொண்டது. மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த பின்னர் அளித்த பேட்டியில் ஒருபுறம் பேச்சு நடத்தினாலும் மறுபுறம் இராணுவ தயாரிப்பு நட வடிக்கைகளில் ஈடுபட்டதாக ஜனாதிபதியே ஒப்புக் கொண் டுள்ளார்.

நாம் அப்போது யுத்த நிறுத்தத்தையே வலியுறுத்தி னோம். ஆனால் அரசு மோதல் ஓய்வையே அமுல் படுத்தியது. எமது தலைவர் பிரபாகரன் அதில் ஒப்பமிட்ட தால் எமது உறுப்பினர்கள் அதனைப் பேண ஒத்துழைப்பு

கடந்த நாற்பது வருடங் களாக பேரினவாத சக்திகளி னால் தமிழ் மக்கள் ஏமாற்றப் பட்ட வரலாறு உள்ளதால் மக்கள் நம்பிக்கையை ஏற் படுத்தக்கூடியதான நடவடிக் கைகளை முதலில் மேற் கொள்ளுமாறு கேட்டோம். அதாவது அரசியல் தீர்விற்கு முன்னர் நம்பிக்கை தரக்கூடிய தான அறிகுறிகளையே வலி யுறுத்தினோம்.

### இராணுவத்தின் கை

இதனால் பூநகரி பாதை யைத் திறத்தல், யுத்த நிறுத் தம் மற்றும் பொருளாதாரத் தடை நீக்கம் என்பவற்றை வலியுறுத்தினோம். அப்போது பொருளாதார தடையை நீக்க ஜனாதிபதி விரும்பினாலும் இராணுவத்தினர் விரும்பாத நிலை உருவானது. தற்போது இராணுவத்தினரின் கையே ஓங்கியுள்ளது. இராணுவத்தி னர் யுத்த நிலை நீடிப்பையே விரும்புகிறார்கள்.

அரசியல் தீர்வுத்திட்டம் உத்தியோகபூர்வமாக எமக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இத னால் அதுபற்றி பூரணமாக எமக்குத் தெரியாது. அத் தோடு அதன் இறுதி வடிவம் எவ்வாறு அமையுமென்றும் சொல்லமுடியாது. அரசு நேர டியாகவோ அல்லது மூன்றா வது நடுநிலைமை சக்திகளூ டாகவோ தீர்வுத்திட்டத்தை சமர்ப்பித்தால் பரிசீலிக்கத் தயாராகவுள்ளோம்.

### தலைமைச் சிறப்பு

எமது இலட்சியம் தமிழீ ழமே. எந்தக் கட்டத்திலும் மக்களின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படாதவரை ஆயுதங் களைக் கீழே போடமாட் டோம்.

இராணுவத்தினரைதாக்கி யழிக்கும் பலமும் மனோ வலிமையும் எம்மிடமுண்டு. கடந்த பல வருடங்களாக போர்ச்சூழலை சமாளிக்கும் அனுபவமும் எமக்குண்டு.

இந்திய இராணுவம் இங்கு வந்தபோது நாம் தலையெடுக்க முடியா தென்றே பலரும் கருதினார் கள். தலைவர் பிரபாகரனின் மனோவலிமையினாலும் வழி நடத்தலினாலுமே வெற்றி பெற்றோம் என்று கரிகாலன் இச்சந்திப்பின் போது விளக்க மளித்தார்.

---

வடமராட்சி தென்மராட்சி பகுதிகளில் அவசர சிகிச்சைக் காக நோயாளிகளுக்குத் தேவைப்படுகின்ற இரத்தம் பெறுவது கஷ்டமானதொரு காரியமாக மாறியுள்ளதாக வைத்திய சுகாதார பகுதி வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

மலேரியா நோய் மக்கள் மத்தியில் பரவியுள்ளமையே இதற்கு காரணம் என கூறப் படுகிறது.

www.padippakam.com



# தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்

## தந்தை செல்வா வாக்கு பலிக்குமோ?

இருபத்தேழு ஆண்டுகள் சிறையில் அடைபட்டு மீண்ட தென்னாப்பிரிக்க சுதந்திர போராட்ட வீரன் நெல்சன் மண்டேலையைப் போல ஈழத்து தமிழ் மக்களை, வழிநடத்திய 1971 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா தேர்தலில் அமோக வெற்றிவாகை சூடியபோது, மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் மேற்கூறிய கடைசி வார்த்தைகள் இன்று எவ்வளவு தெளிவாகிவிட்டது.

''என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல;
உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று
கர்த்தர் சொல்கிறார்,
பூமியைப் பார்க்கிலும், வானங்கள் எப்படி
உயர்ந்திருக்கிறதோ, அப்படியே
உங்கள் வழிகளைப் பார்க்கிலும்,
என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது''
ஏசாயா 56:6-12

''எகிப்தில் அடிமையாக்கப்பட்டு வாழ்ந்த இஸ்ரவேல் புத்திரர்களை தேவன் அடிமைத்தனத்திலிருந்த மீட்க மோஸேயை தேர்ந்தெடுத்து வழிநடத்தியவாறு தமிழ் ஈழத்து மக்களை மூதறிஞர் தந்தை செல்வா வழிநடத்திச் சென்றார்.'' அமரர் தந்தை செல்வா இரங்கலுரையில், தென்னிந்திய திருச்சபை வண.பிதா. அம்பலவாணர்-

''பல வருடங்களுக்கு முன் கிழக்கு ஜெர்மனி தேசத்தில் இலங்கை அகதிகளுக்கு மத்தியில் இயேசுவை அறிவிக்க கூட்டம் ஒழுங்கு செய்து என்னை (வண. டாக்டர் புஷ்பராஜ் அவர்களை) அழைத்திருந்தார்கள்.

அது மிகவும் பெரிய கூட்டமாக அமைந்தது. கூட்டம் தொடங்கும் சமயம், இலங்கை மக்களின் சுதந்திரத்திற்காக உயிரைப் பணயம் வைத்துபோராடிக்கொண்டிருக்கும் அந்த தியாக இயக்க வீரர்களில் சிலர் அங்கு வந்து அந்த கூட்டத்தில் தாங்களும் பேச வேண்டும் என்று கூட்ட ஏற்பாட்டை செய்தவர்களிடம் வாதாடிக் கொண்டிருந்தார்கள். அந்த பொறுப்பாளர்கள் அந்த இயக்க வீரர்களை (புலிகளை) என்னிடம் கொண்டு வந்து அறிமுகப்படுத்தினார்கள்.

அவர்கள் என்னிடம் மிக மரியாதையாகத்தான் வின்னப்பித்தார்கள். இலங்கையில் நடக்கும் பிரச்சினைகளை எங்கள் மக்களாகிய இவர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றார்கள்.

நான் சொன்னேன். இது ஆவிக்குரிய கூட்டம் (Spiritual Meeting) அரசியல் பேசும் கூட்டம் அல்ல என்றேன். மேலும் இந்த மக்களோடு நீங்கள் பேச எல்லாவித உரிமையும் உங்களுக்குண்டு. ஆனால் இங்கல்ல! உங்களுக்கு சவுகரியமான நேரத்தில் எங்கு வேண்டுமானாலும் இம்மக்களை சந்திக்கலாமே என்று பயத்தோடே பவ்யமாக எடுத்துக் கூறினேன்.

அதற்கு அவர்கள் இவ்வளவு பெரிய கூட்டமாக எங்கள் இன மக்கள் இந்த் ஜெர்மனியில் எங்கும் கூடியதில்லை. ஆகவேதான் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள இங்கு வந்தோம் என்றார்கள்.

இந்த கூட்டம் கடவுளைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டிக் கூடியதாகும் என்றேன்.

அதற்கு அவர்கள் மிக ஞானமாகப் பேசினார்கள். நாடு இருந்தால்தானே மக்கள்.

மக்கள் இருந்தால் தானே சபை, தெய்வ வழிபாடு இவையெல்லாம் இயங்கும். எங்கள் நாடு இரத்தவெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் போது கடவுளைப்பற்றி எப்படி சிந்திப்பது?

உங்கள் இந்தியாவில் ஒவ்வொரு மாநிலமும் சுதந்திரமாக இயங்குகிறது. ஒரு காந்தியும் அவருக்கு பின்னே கோடி கோடியான மக்களும் அந்தக் காலத்தில் சுதந்திரமாக போராடாமல் இருந்திருந்ததால் இன்று நீங்கள் இயேசுவை அறிவிக்கும் ஊழியம் செய்ய இயலுமா?

உடனே நான், இப்போதும் இலங்கைக்காகத்தான் தாங்கள் ஜெபிக்கக் கூடியிருக்கிறோம் என்றேன். அதற்கு அவர்கள், ஜெபிக்க கூடியிருக்கிறோம் என்றேன். அதற்கு அவர்கள், ஜெபித்துக்கொண்டே இருந்தால் இலங்கையின் அழிவு நின்று விடுமா? கொடுமைகள் மாறிவிடுமா? என்றார்கள்.

நான் சொன்னேன் நிச்சயமாக ஜெபம் தேசத்தையே மாற்றும். வாள், துப்பாக்கி பிடிக்காமலே கர்த்தரால் அது மாறும்.

எசே. 22:30-ஆல் நான் தேசத்தை அழிக்காதபடி திறப்பின் வாயில் நிற்க ஒரு புருஷனை தேடினேன்...என்ற

வசனத்தை ஆங்கில வேத புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டினேன். கர்த்தருடைய பிள்ளைகள் கூடி ஜெபித்தால் கர்த்தர் தேசத்தை காப்பாற்றுவார். மத்தேயு 18:19 என்றும் கூறினேன்.

இதுதான் இயேசு எங்களுக்கு போதித்த வழி. இதை போதிக்கத்தான் நான் இத்தனை ஆயிரம் மைல்கள் கடல் கடந்து வந்திருக்கிறேன்!! என்று கூறி என் வாழ்க்கை எப்படி இயேசுவாய் மாறியது என்பதை விளக்கி, கடைசியாக சகரியாவின் புத்தகம் 4:6இல்:-

''பலத்தினாலும் அல்ல,
பராக்கிரமத்தினாலும் அல்ல
என்னுடைய ஆவியினாலேயே ஆகும்''

என்ற வசனத்தை ஆங்கில வேத புத்தகத்தில் எடுத்துக் காண்பித்து அவர்களையே வாசிக்கச் சொன்னபோது அவர்கள் அதிர்ந்து போனார்கள்.

ஆங்கில மொழிபெயர்ப்பில்:-(Good News Bible)
''You will Succeed not by Military
Might or by your
Own Strength but by Spirit'' Zech. 4:6

மேலே வாசித்த குறிப்பிட்ட ஆங்கில மொழிபெயர்ப்பில் மிலிடெரியினாலோ ஜெயிக்கமாட்டாய். ஆனால் என் பரிசுத்தாவியின் வல்லமையே ஜெயிக்க வைக்கும் என்ற அர்த்தத்தில் மொழிபெயர்க்கப்பட்டதை வாசித்ததும் அமைதியானார்கள். அதன்பின் பிரசங்கம் செய்தேன். முடிவிலே இலங்கை மக்களுக்காக, இலங்கையை ஆளுகின்றவர்களுக்காக, விடுதலைப்புலிகளுக்காக ஜெபிப்போம் என்றபோது, கூடியிருந்த மக்கள் எல்லோரும் இலங்கைக்காக கண்ணீர் விட்டு கதறி அழுததை கண்டவுடன் வந்த தீவிரவாதிகள் கோபம் மாறி மிக அமைதியாய் என்னிடம் மிகமிக பவ்யமாக மரியாதையாகப் பேசி விடை பெற்றுச் சென்றார்கள்.

இந்த சம்பவத்தை இங்கு ஏன் கூறினேன் என்றால் ஒரு தேசத்தின் பிரச்சினையை அனுமதித்தவரே, அந்த பிரச்சினைகள் மாற்ற வேண்டுமானால் மக்கள் மனம் திரும்பி தன்னிடமே வரவேண்டும் என்றும் ராணுவமோ, ஆயுதங்களோ, கோர்ட் தீர்ப்போ மாற்ற முடியாததை இறைவனின் வல்லமை கிரியை மாற்ற முடியும் என்று கர்த்தர் திட்டவட்டமாக கூறுகிறார். இதுதான் கிறிஸ்தவர்களின் விசுவாசமாக இருக்கவேண்டும்.

கட்டுரையாளர் டாக்டர் புஷ்பராஜ்
''ஜாமக்காரன்'' ஆகஸ்ட், 1994
தரவு : ஆர். சாம்சன்பவர்

# உங்கள் குறைகள் எதுவானாலும் தீர்த்து வைக்க நாங்கள் தயார்

## திருச்சி மண்டல மாணவர் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஐ. நா. அகதிகள் உயராணைய அதிகாரி உறுதிமொழி

எத்தனையோ வசதிக் குறைவுகளுக்கு மத்தியிலும் இலங்கை அகதி மாணவ மாணவிகள் மாணவர் மன்றக் கூட்டங்களில் ஆர்வத்தோடு பங்குகொள்வது, நீங்கள் கல்வி மீது கொண்டிருக்கின்ற அக்கறையைப் புலப்படுத்துகின்றது. இந்த அக்கறையை வளர்த்தாக வேண்டிய பொறுப்பு சகல மனிதாபிமான அமைப்புகளுக்கும் இருக்கின்றது. அந்தப் பொறுப் புணர்ச்சியுடன் கூறுகிறேன். உங்கள் குறைகள் எதுவானாலும் தீர்த்துவைக்க நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு, 1996 சனவரி 20ம்நாள் திருச்சியில் நடைபெற்ற திருச்சி மண்டல இலங்கை அகதி மாணவர் மன்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்ட ஐ.நா. அகதிகள் உயராணையத்தின் சென்னை அலுவலகப்பொறுப்பாளர் திரு. சுனில்பகதூர் தாப்பா கூறினார்.

### கயிலாயபிள்ளை

திருச்சி மண்டல ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தை மண்டல இணைப்புக் குழு உறுப்பினர் வை. குமாரசாமி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். தமிழ்ப்பண்ணுடன் தொடங்கிய இக்கூட்டத்திற்கு வருகை தந்தோரை மாவட்டத் தன்னார்வத் தொண்டர் சே. செல்வரத்தினம் வரவேற்றார். ஈ.ஏ.ம.க. தலைமையகத்தின் அகதிகள் பிரிவுப் பொறுப்பாளர் மு. பரம் அறிமுக நிகழ்வை நடத்தி வைக்க, முனைவர் அரு. கோபாலன் தலைமையேற்று ''மலரவிருக்கும் தமிழீழத்தில் மாணவர்களின் பங்களிப்பு'' பற்றி உரையாற்றினார். சிறப்பு விருந்தினர் சுனில் பகதூர் தாப்பாவின் ஆங்கில உரையை விசுவேஸ்வரன் தமிழ்ப்படுத்தினார்.

கழகச் செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பு பற்றி மாவட்டத் தன்னார்வத் தொண்டர் இரா.சஸ்வரனும், மாணவர் மன்ற அமைப்பு விதிகள் குறித்து க. தனபாலசிங்கமும், கல்லூரிக்கல்வியில் அகதி மாணவர்கள் எதிர்கொள்ளும் இடர்களும் கழகச் சேவையும் என்பதுபற்றி செ.சா. இளங்கோவனும் உரையாற்ற, முத்தாய்ப்பாக கழகத்தின் மூத்த தலைவர் வே. கயிலாயபிள்ளையின் சிறப்புரையும் இடம்பெற்றது.

### பேச்சுக்கள்

அடுத்து, மாணவ-மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள்இடம் பெற்றன. அவற்றில் பேச்சு என்ற வகையில் 1 கொட்டப்பட்டு ஜெயகணேசன், 2. தோப்புக்கொல்லை என்று சோபா, 3. லெனாவிளக்கு சண்முகராஜன், 4. தோப்புக் கொல்லை எம். இளங்கோ, 5. லெனாவிளக்கு மரியசீலி, 6. கூடல் நகர் எ. வாமினி, 7. ஆனையூர் மேரி ஸ்டெல்லா 8. பெரியார் நகர் சசிகலா, 9. ஆனையூர் கவிதா ஆகியோரின் உணர்ச்சி உரைகளும்-

### கவிதைகள்

கவிதைகள் என்ற வகையில் 1. கொட்டப்பட்டு நிர்மலா, 2. நாட்டரசன்கோட்டை ஜெயராஜ், 3. கொட்டப்பட்டு குமார், 4. கோயில்பட்டி பாலசேகர், 5. பெரியார் நகர் யோகேஸ், 6. கோயில்பட்டி விஜயகுமார், 7. பெரியார் நகர் ஜெபநேசன், 8. லெனாவிளக்கு அன்றனி சகாய ஜேம்ஸ், 9. தோப்புக் கொல்லை ஈழநாதன், 10. லெனாவிளக்கு சுதன்ராஜ் ஆகியோர் தாம் படைத்த கவிதைகளைச்சமர்ப்பித்தனர்.

### கட்டுரைகள்

கட்டுரைகள் என்ற வகையில் 1. கொட்டப்பட்டு மஞ்சுளா, 2: நாட்டரசன் கோட்டை விஜயலட்சுமி, 3. கொட்டப்பட்டு இந்திரலக்ஸ்குமாரன், 4. ஆனையூர் ரெசசான் ஆகியோர் தம் ஆக்கங்களை வாசித்தனர்.

1. லெனாவிளக்கு ஜாய் பிரேம்குமார், 2. தோப்புக் கொல்லை யேசுதாசன், 3. லெனாவிளக்கு தமிழ்வேந்தன், 4. கோபால்பட்டி ஜெகதீஸ்வரன், 5. லெனாவிளக்கு அன்ரன் அமலதாஸ், 6. கூடல் நகர் கவிதா ஆகியோர் இனிய குரலெடுத்து இசைப்பாடல் பாடினார்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# அமரர் தி.க. இராஜசேகரன் எம்.ஏ. அவர்களின் நினைவு கணிதப் புலமைப் பரிசில்

## முடிவுகள் அறிவிப்பு

1) 10வது ஆண்டு மற்றும் 12வது ஆண்டுப் பொதுத் தேர்வு எழுத, தமிழகப் பள்ளிகளில் படிக்கும் இலங்கை அகதி மாணவர்கள்-அகதி முகாம்களில் தங்கியுள்ளோர் கணிதப் பாடத்தில் 1995ஆம் ஆண்டு காலாண்டு, மற்றும் அரையாண்டுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களின் கூட்டுத் தொகை கணக்கிடப்பட்டு, அதிக மதிப்பெண்கள் பெற்றிருப்போருக்கு 10வது ஆண்டு அகதி மாணவர்களுக்குத் தனியாகவும், 12வது ஆண்டு அகதி மாணவர்களுக்குத் தனியாகவும் கணிதப்புலமைப் பரிசுகள்.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ. | 1000/- |
| இரண்டாம் பரிசு | ரூ. | 800/- |
| மூன்றாம் பரிசு | ரூ. | 600/- |

வழங்கப்படும் என்றும், இவர்களில் 60 விழுக்காட்டுக்குக் குறையாமல் கணிதப் பாடத்தில் மதிப்பெண் பெற்றிருக்கும் மேலும் 25 அகதி மாணவர்களுக்கு ஆறுதல் பரிசு தலா ரூ. 500/- வழங்கப்படும் என்றும்,

2) அதைப்போலவே முகாம்களுக்கு வெளியில் வதியும் அகதி மாணவர்களுக்கும் மேற்கண்டபடி தனியாகப் பரிசுகள் வழங்கப்படும் என்றும்,

3) இப்பரிசுத் தொகைகள் அவர்கள் முழு ஆண்டுத் தேர்வுக்கான தயாரிப்புக்கு உதவிடும் வகையில் 1996 தை மாத இறுதியில் வழங்கப் பெறும் என்றும் 'ஈழசுதந்திரனில்' அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

அதற்கேற்ப 2-2-1996 அன்று நடந்த ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழக முகாமைக்குழுக் கூட்டத்தில் மேற்படி அமரர் இராசசேகரன் நினைவுப் புலமைப் பரிசுக்கான இலங்கை அகதி மாணவர்களின் மதிப்பெண் பட்டியலை (அறிவிப்பில் கண்ட தேதிக்குள்வந்த விண்ணப்பங்களை மட்டும்) பரிசீலனை செய்வதற்கு திரு. சாம்கோயில்பிள்ளை, செல்வி பிரிஜெட், புலவர் அனு. வெண்ணிலா ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு கழகத்தின் கல்விக்குழுவுடன் கலந்து பேசி, வந்திருந்த விண்ணப்பங்களை கவனத்தில் எடுத்தபோது, 10-ம் வகுப்பைப் பொறுத்தவரை முகாம்களில் வதியும் மாணவர்களிடமிருந்து 28 விண்ணப்பங்களும், 12ம் வகுப்பைப் பொறுத்த வரை 8 விண்ணப்பங்களும் வந்திருந்தவை ஏற்றுக் கொள்ளப்பட்டன.

முகாமிற்கு வெளியே வதியும் இலங்கை மாணவர்களைப் பொறுத்தவரை 10-ம் வகுப்பிலிருந்து மட்டும் 3 பேர் மாத்திரமே விண்ணப்பித்திருந்தவையும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

### 10-ம் வகுப்பில் பரிசு பெறுவோர்

உரிய பரிசீலனைக்குப்பிறகு 10-ம் வகுப்பில் பயிலும் முகாம்களில் வதியும் அகதிமாணவர்களில் ஆகக்கூடிய மதிப்பெண் பெற்ற சி. சிந்துஜா, மே/பா. திருமதி கணேசலிங்கம், 132, இலங்கை அகதிகள் முகாம், பரமத்தி, சேலம் மாவட்டம் முதல் பரிசு ரூ. 1000/-மும்,

சி. மரியசீலி, இலங்கை அகதி முகாம், லேனாவிளக்கு, புதுக்கோட்டை மாவட்டம் இரண்டாம் பரிசு ரூ. 800/-

ஏ.யூட் அலோசியா, இலங்கை அகதிகள் முகாம், அடியண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம் மூன்றாம் பரிசு ரூ. 600/-ம் பெறுகிறார்கள்.

அதைப்போலவே பின்வரும் 25 பேரும் ஆறுதல் பரிசுக தலா ரூ. 500/-பெறுகிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

1. ரோ. கிடில்டி தயான், இலங்கை அகதிகள் முகாம் அடியண்ணாமலை திருவண்ணாமலை மாவட்டம்.
2. எம். பிரபாகரன், இலங்கை அகதிகள் முகாம் கற்பூர சுந்தரபாண்டியன் ராமலட்சுமி ஆண்கள் பாடசாலை சிவகங்கை மாவட்டம்.
3. எம். ரஜிதா, மே/பா. மன்மதராஜா, இலங்கை அகதிகள் முகாம் மல்லாங்கிணறு, காமராஜர் மாவட்டம்.
4. கே. சசிகலா, மே/பா. பி. கருப்பையா, இலங்கை அகதிகள் முகாம், இல. 2145, மொட்டமலை, காமராஜர் மாவட்டம்.
5. கே. ராமேஸ்வரி, இலங்கை அகதிகள் முகாம், (மாணவர் மன்றம் ஊடாக) வாணியாறு அணை முன்னக்காடு அஞ்சல் பாப்பிரெட்டிபட்டி தர்மபுரி மாவட்டம்,
6. எம். செல்வக்குமாரி, இலங்கை அகதிகள் முகாம், தென்பள்ளிப்பட்டு திருவண்ணாமலை மாவட்டம்,
7. எம். குகதேவி, மே/பா. ஜீவா, எ.16, இலங்கை அகதிகள் முகாம் (கஸ்தம்பாடி) கன்னிகா புரம், பேளூர் அஞ்சல், திருவண்ணாமலை மாவட்டம்.
8. கே. மோகனேஸ்வரி, இலங்கை அகதிகள் முகாம் அழியா நிலை அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.
9. ஆர். ஜிம். பெர்னாண்டோஸ், இலங்கை அகதிகள் முகாம் 94, கோழிவிளை, கன்னியாகுமரி மாவட்டம்.
10. ஆர். ருசாந்தி, இலங்கை அகதிகள் முகாம் தென்பள்ளிப்பட்டு திருச்சி மாவட்டம்.
11. ஜி. நாகநாதன், இலங்கை அகதிகள் முகாம் கொட்டப்பட்டு திருச்சி மாவட்டம்.
12. கு. பாலசிங்கம், இலங்கை அகதிகள் முகாம் சின்னப் பள்ளிக்குப்பம், வாணியம்பாடி வடஆற்காடு மாவட்டம்.
13. எம். ராகவன், மே/பா. மன்மதராஜா இலங்கை அகதிகள் முகாம் மல்லாங்கிணறு, காமராஜர் மாவட்டம்.
14. சி. வரதராஜன், இலங்கை அகதிகள் முகாம் வாலாஜா அணைக்கட்டு வட ஆற்காடு மாவட்டம்.
15. ஆர். உதயபாலன், இலங்கை அகதிகள் முகாம் கொட்டப்பட்டு, திருச்சி மாவட்டம்.
16. எஸ். சௌந்தரம், இலங்கை அகதிகள் முகாம் மூங்கிலூரணி மானாமதுரை, பசும்பொன் மாவட்டம்.
17. வி. சுஜிதா, இலங்கை அகதிகள் முகாம் லேனாவிளக்கு, புதுக்கோட்டை மாவட்டம்.
18. எம். ஜெயசித்திரா, இலங்கை அகதிகள் முகாம் தென்பள்ளிப்பட்டு தி. சம்புவராயர் மாவட்டம்.
19. எஸ். மோகநாதன், இலங்கை அகதிகள் முகாம், 108, பிள்ளையார் கோயில் சங்கரன் கோயில் நெல்லை.
20. ஆர். தர்மதேவன், மே/பா பி. ராஜதுரை, 408, இலங்கை அகதிகள் முகாம் கும்மிடிப்பூண்டி, எம்ஜிஆர் மாவட்டம்.
21. வி. தேவராஜா, இலங்கை அகதிகள் முகாம் வாணியாறு அணை முன்னக்காடு அஞ்சல், பாப்பிரெட்டிபட்டி தாலுகா, தர்மபுரி மாவட்டம்.
22. ஜே. தர்மினி யூட்கலாஸ், மே/பா ஏ. ஜேம்ஸ், இலங்கை அகதிகள் முகாம் வேலப்பாடி ஆரணி திருவண்ணாமலை மாவட்டம்.
23. சி. மேரி யூலியட், இலங்கை அகதிகள் முகாம் லேனாவிளக்கு, புதுக்கோட்டை.
24. து. ரவிக்குமார், இலங்கை அகதிகள் முகாம் கொட்டப்பட்டு, திருச்சி மாவட்டம்.
25. அ. அரவிந்தன், இலங்கை அகதிகள் முகாம் மொட்டமலை, காமராஜர் மாவட்டம்.

12ம் வகுப்பில் பயிலும் முகாம்களில் வதியும் அகதி மாணவர்களைப் பொறுத்தவரை, கணிதப் பாடத்தில் 60 விழுக்காட்டுக்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற 8 பேர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் வந்திருந்தன. அவர்களில் ஆகக்கூடிய மதிப்பெண்கள் பெற்றிருந்த.

எஸ். சந்திரபோஸ், இலங்கை அகதிகள் முகாம், கண்டியாபுரம், கங்கர் செவல் அஞ்சல், சாத்தூர் வட்டம், காமராசர் மாவட்டம் முதல் பரிசு ரூ. 1000/-மும்,

எம். சுரேந்திரன், மே/பா. மரியதாஸ், ஜி.எச். பாடசாலை, வத்தலக்குண்டு, திண்டுக்கல் மாவட்டம். இரண்டாம் பரிசு ரூ. 800/-

பி. அந்தோனி மங்கம், மே/பா. பன்னைத்து, ஜி.எச். பாடசாலை, வத்தலக்குண்டு, திண்டுக்கல் மாவட்டம் மூன்றாம் பரிசு ரூ. 600/-ம்

அதைப் போலவே பின்வரும் 5பேர் தலா ரூ 500 ஆறுதல் பரிசும் பெறுகிறார்கள். என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம் :

4. கே. ரஞ்சனா, மே/பா. கருப்பையா, இலங்கை அகதிகள் முகாம் இல. 312, மொட்டமலை, காமராஜர் மாவட்டம்.
5. சி. தமிழ்ச்செல்வன், சி.சி.கே. உயர்நிலைப்பள்ளி மாணவன், 114, இ. அகதிகள் முகாம் கோழிவிளை, கன்னியாகுமரி மாவட்டம்.
6. ச. சுபகணேஸ், இலங்கை அகதிகள் முகாம் கொட்டப்பட்டு, திருச்சி.
7. ஜி. ரவின்சன், இலங்கை அகதிகள் முகாம் 22/4, கோபாலபுரம் 627451 திருநெல்வேலி மாவட்டம்.
8. எஸ். பவானி, இலங்கை அகதிகள் முகாம் துவாக்குடி வி.வி.கோட்டை, திருச்சி மாவட்டம்.

முகாம்களுக்கு வெளியில் வதியும் இலங்கை அகதி மாணவர்களைப் பொறுத்தவரை 10ம் வகுப்பு பயிலும் மூன்று பேரிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் வந்துள்ளதாலும், அம்மூவருமே அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்ததாலும், அவர்களிலும் ஆகக்கூடிய மதிப்பெண் பெற்ற

ச. கல்யாணந்தி, மே/பா.எஸ். யோகேஸ்வரி, 148, கிருஷ்ணமாச்சாரி நகர் 5வது தெரு, ஆலப்பாக்கம், சென்னை-116 முதல் பரிசு ரூ. 1000/மும்,

வாகினி, மே/பா. என்.பேரம்பலம், எச்/392, ஜெ.ஜெ. நகர், சென்னை-50 இரண்டாம் பரிசு ரூ. 800/ம்,

ச.நிருபன், மே/பா. எஸ்.மகேஸ்வரி, 358, அதிர்ஷ்ட லட்சுமி நகர் 21வது குறுக்குத்தெரு, ஆலப்பாக்கம், சென்னை 116 மூன்றாம் பரிசு ரூ. 600/ம் பெறுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

இவர்களுக்கு பண விடை (M.O.) மூலம் பரிசுத் தொகைகள் அனுப்பிவைக்கப்படவிருப்பதாக ஈ.ம.க. அகதிகள் பிரிவுப் பொறுப்பாளர் மு.பரம் அறிவித்துள்ளார்.

---

மன்னாரில்

## எரிபொருளை கொள்கலனில் எடுத்துச்செல்ல தடை

மன்னார் பகுதியில் வாகனங்களுக்கான எரிபொருள்களை வாங்கிக், கொள்கலன்களில் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. வாகன உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களுக்கு எரிபொருள்கள் தேவையென்றால் மன்னார் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு தங்கள் வாகனங்களை கொண்டு வந்து எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பேசாலை உழவு இயந்திர உரிமையாளர்கள் தமக்கான எரிபொருள்களை பேசாலை மீனவக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகப்பெற்றுக் கொள்ளமுடியும்.

மேலும் தலைமன்னார் கிராமம், தலைமன்னார் பியர் மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது எரிபொருள்களைத் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்து தமது சங்க உறுப்பினர்களுக்கு வாரத்தில் இரு முறை அல்லது மூன்று முறைமுறைப்படிவிநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வர்த்தக சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நாடகங்கள் என்ற வகையில் லெனாவிளக்கு முகாமிலிருந்து 1. ''முகாமில் சில மனிதர்கள்'' 2. ''கழகச் சேவை'' என இரு நாடகங்களையும், பெரியார் நகர் முகாமிலிருந்து ''கல்வியின் முக்கியத்துவம்'' என ஒரு நாடகத்தையும், உச்சப்பட்டி முகாமிலிருந்து ''மக்களின் ஒற்றுமை'' என ஒரு நாடகத்தையும், அடியனூத்து முகாமிலிருந்து ''மாணவர்களுக்கு உயர்கல்வி மறுக்கப்பட்டால்?...'' என ஒரு நாடகமும், கொட்டப்பட்டு முகாமிலிருந்து ''சுற்றுப்புறச் சூழல்'' என ஒரு நாடகமும் நடத்திக் காட்டப்பட்டன.

நாட்டியம் என்ற வகையில் உச்சப்பட்டி முகாமைச் சேர்ந்த கே. ராகினியின் பரத நாட்டியமும், கொட்டப்பட்டு முகாமைச் சேர்ந்த மஞ்சுளாவின் சுற்றுச்சூழல் பற்றிய அபிநயமும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமைந்தன.

இறுதியாக மண்டல இணைப்புக் குழுவைச் சேர்ந்த திருமதி அ. ரொசாரியம்மா நன்றி நவில, காலை 10-30 மணியளவில் தொடங்கிய கூட்டம் மாலை 6-30 மணியளவில் இனிதே நிறைவெய்தியது.

# கவிதைச் சரம்

## வழி சொன்ன தெய்வங்களே

(தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவ பயிற்சி நிறைவுப் பாடல்

தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவம் என்பது மனிதவள மேம்பாடுகளுக்குத் தம்மை முழுமையாக ஒப்படைத்துள்ளவர்கள் அறிந்திருக்க வேண்டிய. கற்றவர்-கல்லாதவர் அனைவரும் தெரிந்திருக்க வேண்டியதோர் ஒளிப்பிழம்பாகும்! அந்த வகையில் எமக்கு புத்துணர்வு தந்த கடந்த 23-01-1996ல் இப் பயிற்சியை நிறைவு செய்த நல்லறிஞர்களுக்கு எமது இதயக் காணிக்கை !

சரணம்

உன்னிடத்தில் கற்றுணர்ந்த...உயர்வான தகவலதை
உண்மையாய்(க்) கரையேற்ற.. என்னிடத்தில் வந்தவனே
உன்பாதம் சரணம்...என் இனிய நேசா—கணேசா !
கலியுகத்தின் தலைமையினை...நான் காண்பதற்கு !
அருள் செய்த வேலே...கந்தவேலே சரணமம்மா !

பாடல் (இசைவடிவில்)

தகவலதைச் சரியாய்க்கற்று...தலைமையினை நாம் பெறவே
வழி சொன்ன தெய்வங்களே...வாழ்த்துங்கள் எங்களையே!
தாங்கள் வானுயர(ப்) பாடுகின்றோம் !—நாங்கள் (தகவ)

யேசு வழி செல்லும் எம் தந்தை எலியாசும் !
மாசு மருவற்ற மாணிக்க வாசகரும் !
மழலைக் குரலோசையில்...மலர்மகள் ஹேமாவுடன்...
கூறும் கதை கேட்கும் நாம்... (தகவ)

இரவிலும் சிரிக்க வைக்கும் ரவிராஜா ஜோக்குகளும் !
இதயத்தைக் குளிர வைக்கும் இளங்கோவின் இயல்புகளும் !
வினை (சந்தேகம்) தீர்க்கும் வேலாயுதம்...
விளக்கிடும் வேதங்களை...நாம்... (தகவ)

ஈழவர் துயர் தீர்க்கவே...ஏழு கடல் தாண்டி....
நம் சோகத்தை கூறிடும்...சத்தியத்திரு நாயகன்...
சந்திரகாசன் வழி...நிச்சயம் நாம் நடக்கும்... (தகவ)

K.S. காளிமுத்து
வெம்பக்கோட்டை

தோல்விப்பாதையிலே விழுந்து
தோயாமல் மீள வேண்டும்

சோர்வு நோய் அகன்று
சுறுசுறுப்பான வாழ்வு வேண்டும்

உறுதியான நல் நெஞ்சத்தோடு
உண்மையான தெளிவு வேண்டும்

கடமை உணர்வை எண்ணிக்
கடுமையாகப் போராட வேண்டும்

வேதனை என்பதில் வேகாமல்
சாதனை புரியும் துணிவு வேண்டும்

மனக்காயங்கள் பல தடுத்தும்
நியாயமே வென்றிட வேண்டும்

நல்ல திட்டமிட்ட செயல் எல்லாம்
திருப்தியாக முடிய வேண்டும்.

எஸ். தங்கேஸ்வரி
இ.அ.முகாம்,
பாணாவரம் அரக்கோணம்
வ.ஆ.அ. மாவட்டம்

## அழியுதே ஈழம்

சாதனை பல புரிந்தவனும் தமிழன் தானடா
சரித்திரம் பல படைத்தவனும் தமிழன்தானடா

ஈனப்பிறவிகளின் வெறி ஆட்டமடா,
ஈழத்தமிழினமே அங்கே அழியுதடா

கட்சிகள் பல ஆறுதல் சொன்னதடா
கலைஞர்களின் அன்பு ஆறாய்ப் பெருகுதடா

அகதி என்று ஒரு பட்டம் கிடைத்ததடா
அறுந்து போன உறவுகள் ஒட்டுதடா

தாய்த்தமிழகம் இதயம் குமுறுதடா
தஞ்சம் அடைந்த தமிழன் அனாதை இல்லையடா

காந்தி பிறந்ததும் இந்தியமண்ணில் தானடா
கருணை உள்ளங்கள்பிறந்ததும் இந்திய மண்ணில் தானடா?

புத்தன் பிறந்ததும் இந்திய மண்ணில் தானடா
புண்ணிய சீலர்கள் பிறந்ததும் இந்திய மண்ணில் தானடா

முத்தமிழ் பிறந்ததும் இந்திய மண்ணில்தானடா
மூவேந்தர்கள் பிறந்ததும் இந்தியமண்ணில் தானடா

தமிழ் ஈழத்தில் குண்டு மழை பொழியுது பாரடா
தமிழினமே நினைத்தால் சிங்களவன் யாரடா

வி. சண்முகானந்தம்
இ.அ.முகாம்
பாணாவரம் அரக்கோணம்
வ.ஆ.அ.மாவட்டம்.

## யாருக்கும் நேரமில்லையோ !

உள்ளதை சொன்னால்
குற்றமடா !
உலகிற்கு உண்மை
என்றும் இழிவாய்ப்
போனதடா !
இதனால்-உத்தமர்
வாக்கும் தோற்குதடா !
நீதி நிலை தடுமாறுதடா !
நியாயங்கள்
தோற்றுப் போகுதடா !
பகைமைகள்
பலித்து போனதனால்
பாரில் பாவங்கள்
தலை விரித்தாடுதடா !
ஆசைகள்
எல்லை மீறுவதால்
அறிவு தடுமாறுதடா !
பேராசைகள்
விளைந்து போனதனால்
பேரழிவுகள்
இன்று நிகழுதடா !
போட்டிகள்
பொறாமையாய் மாறுவதால்
எங்கும் போர்க்களம்
இன்று தெரியுதடா
சாந்தி குலைந்து
போகுதடா !
சமாதானம்
மலர மறுக்குதடா !
ஏன் இந்த
நிலை என்று
எண்ணி யார்தான்
பார்ப்பாரடா !
தேர்வழியில் சிந்திக்க
யாருக்கும்
நேரமில்லைப்போல்
தெரியுதடா !

## மீட்பார் யாரோ?

இது எங்கள் சமுதாயம் இசைக்கின்ற நாதம்
இன்பம் எங்கே என்பது இன்று எங்கள் ஏக்கம்

ஆண்ட தமிழினம் இன்று அல்லல் படலாமோ
மாண்டு மாண்டு பிணமாக மண்ணில் விழலாமோ,
இருவில் இருந்து இன்று நாங்கள் பாடும் பாடல்
விடியலை நோக்கியே இனி எங்கள் தேடல்

அகதி எனும் பெயர் சுமந்து அவதியாகவே
அலைகடல் கடந்து வந்து அந்தரிக்கின்றோம்-இரத்தச்
சகதியாகிப் போகும் எங்கள் தேசம் மீளவே
சந்ததியர் நாங்கள் எல்லாம் காத்திருக்கின்றோம்

ஆளும் இனத்தின் பிடியினிலே அடிமையாகவே
அல்லலுற்று மண் மடியில் உழன்று விழுந்தோம்
என்றுதான் எமது நாட்டில் சங்கு முழங்குமோ
அந்தச் செய்தி காதில் என்று தேனாய்ப்பாயுமோ

அன்றுதான் எமது நாட்டின் ஆதவன் உதிப்பான் -
அதுவரையில் ஒளியிருந்தும் இருளில் மூழ்கினோம்
அகதி என்ற நிலையில் எம்மை அர்ப்பணித்திட்டோம்
கதி கலங்கித் தவிப்போர் எம்மை மீட்பவர் யாரோ!?

விஜி
திருச்சி

## என் வேண்டுதல்

சிந்தனைகள் புதுமை ஆகி
சீறி எழும் துணிவு வேண்டும்

சினம் எனும் குணம் அடங்கிச்
சிறப்புடன் வாழ வழி வேண்டும்

வெறுப்புக்கள் எல்லாம் அடங்கி
பொறுப்புக்களில் நிறைவு வேண்டும்.

செல்லுகின்ற பாதையெல்லாம்

## விடியாதோ புது விடியல்

கவிசுரபி

என்று தீருமய்யா
எங்கள் சோகம்
என்றே விடியும் என்றே
நாம் பார்க்கிறோம்
கொன்று போடுகிறார்
கொடும்பாவிச் சிங்களர் எங்களை
கன்று முதல் தாய் வரை நாங்கள்
தாயகமிழந்து தவிக்கிறோம்
மங்கித்தான் போகுதின்னும்
எங்கள் வாழ்க்கை-தினம்
அங்கம் நொந்து வடிக்கின்றோம்
இரத்த கண்ணீர்
சகதிகளில் வாழ்வது கூட
நிம்மதி காணுது ஏதேதோ !
அகதிகளாய் நாங்களிருந்தும்
துயரே வாட்டுது எங்கெங்கும்

## கவச வாகனங்கள் சகிதம் படையினர் உன்னிச்சியை நோக்கி முன்னேற்றம்

கிழக்கில் ''றிவிரண (சூரிய கிரகணம்) ராணுவ நடவடிக்கை தொடர்கிறது. செங்கலடி பதுளை வீதி வழியாக ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் கவச வாகனங்கள், பீரங்கிகள், உழவு முன்னேறிச் சென்றனர். ஷெல் தாக்குதல்கள், துப்பாக்கிவேட்டுகளை தீர்த்தபடி படையினர் முன்னே

இந்த இராணுவ நடவடிக்கை ஷெல் தாக்குதல்கள் காரணமாக, கொடுவாமடு வேப்பவெட்டுவான், பங்குடவெளி பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

எதுவித எதிர்ப்புமின்றி படையினர் முன்னேறி வரு

www.padippakam.com
படிப்பகம்

# திருநெல்வேலி மண்டல மாணவர் மன்ற அமைப்புக் கூட்டம்

திருநெல்வேலி மண்டல மாணவர் மன்ற அமைப்புக் கூட்டம் 16-1-1996 அன்று நெல்லையை அடுத்த தாழையூற்றிலுள்ள மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது. அன்று தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப்பொங்கலாக இருந்தும் மண்டலத்திலுள்ள அனைத்து முகாம்களிலிருந்தும் மாணவர் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் திரளாக வந்து கலந்து கொண்டனர்.

அன்பு செல்வராஜ் நெறிப்படுத்த அம்மண்டலத்தைச் சேர்ந்தவர்களே முதலில் தமிழீழப் பண்ணையும், ''வாருங்கள் தோழர்களே புதிய வரலாறு நாம் படைப்போம்'' என்ற பாடலையும் பாட காலை 10-30க்கு கூட்டம் ஆரம்பமானது. மண்டலப் பொறுப்பாளர் எம். மகேஸ்வரன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அடுத்து கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுய அறிமுகம் செய்து கொண்டனர்.

பின்னர் முனைவர் அரு.கோபாலன் தலைமையேற்று ''மாணவர் மன்றமும் அகதி மாணவர்களின்பங்களிப்பும்'' என்பது பற்றி உரையாற்றினார். அவரையடுத்து ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் நிறுவனரும் பொருளாளருமான சா.செ. சந்திரகாசன் ''மாணவர் மன்றச் செயற்பாடும் கழகத்தின் பங்களிப்பும்'' என்ற தலைப்பில் நீண்ட உரையாற்றினார்.

அக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஐ.நா. அகதிகள் உயராணையத்தின் சென்னை அலுவலகப் பொறுப்பாளர்களில் ஒருவரான அனிஸ் உதவ்லா அவர்கள், மாணவர் மன்ற அமைப்பை வரவேற்றும் வாழ்த்தியும் பேசினார். அவருடைய ஆங்கில உரையை அவருடன் வருகை தந்திருந்த திருமதி கல்யாணி தமிழில் மொழிபெயர்த்தார். அடுத்து டாக்டர் செல்லத்தம்பி சிறப்புரையாற்ற மதிய உணவுக்காக கூட்டம் கலைந்தது.

மதிய உணவுக்குப்பின் மீண்டும் கூடிய கூட்டத்தில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

1. தாப்பாத்தி முகாமைச் சேர்ந்தவர்கள் ''குறு விளையாட்டு'' எனும் நாடகத்தை நடத்தினார்கள். 2. செவலூர் முகாமைச் சேர்ந்த கணேசன் ஒரு கவிதை படித்தார். 3. கோபால சமுத்திரம் முகாமைச்சேர்ந்தராஜ்வின்சன் ஒரு கவிதை வாசித்தார். 4. சுபாஷ் சிற்றுரை நிகழ்த்தினார் 5. களியக்கவிளை முகாமைச் சேர்ந்தவர்கள் 'சத்துணவு' எனும் தலைப்பில் ஒரு சத்தான நாடகத்தை அரங்கேற்றினார்கள். 6. வெம்பக்கோட்டை முகாமைச் சேர்ந்தவர்கள் 'சுகாதாரம்' என்ற தலைப்பில் அற்புதமான ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்கள். 7. கல்வி குணாநிதி மிமிக்கிரி நகைச்சுவை நிகழ்ச்சி வழங்கினார். 8. குளத்துவாய்ப்பட்டி முகாமைச்சேர்ந்தவர்கள் ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்கள். 9. அதே குளத்துவாய்ப் பட்டியைச் சேர்ந்த சத்தியகலா ஒரு பாட்டுப்பாடினார். 10. வள்ளியூர் முகாமைச்சேர்ந்தவர்கள்'' 'கைகொடுக்கும் கரங்கள்' என்ற தலைப்பில் ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்கள். 11. பவளாம்பிகை ஒரு கவிதையை வாசித்தார். 12. நாரணம்மாள் புரம் முகாமைச் சேர்ந்தவர்கள் ''சுற்றுப்புறச் சூழல்'' பற்றி ஒரு நாடகத்தை நடத்திக் காட்டினார்கள்.

பின்னர் தலைமைக்கழக அகதிகள் பிரிவுப் பொறுப்பாளர் மு. பரம் சுற்றுப்புறச் சூழல் பற்றி நீண்ட உரையாற்ற, அதிலிருந்த தமிழகம் குறித்த செய்தியை முனைவர் அரு. கோபாலன் விளக்க, எஸ். வேலாயுதம் நன்றி நவின்றார். இறுதியாகக் கழக நிறுவனர் இதுபோன்ற சந்திப்புக்களின் பெறுபேறுகள் பற்றி வந்திருந்தவர்களுடன் கலந்துரையாட காலை 10-30 மணிக்குக் கூடிய கூட்டம் மாலை 6-30 மணிக்கு இனிதே நிறைவெய்தியது.

வெளிநாட்டு டாக்டர்கள்

# பின்தங்கிய யுத்தப்பகுதியில் கடமையாற்றுவதில் ஆட்சேபனையில்லை

*மருத்துவ அதிகாரிகள் சங்க தலைவர் கூறுகிறார்*

வெளிநாட்டில் இருந்து இங்கு கொண்டுவரப்படும் வெளிநாட்டு டாக்டர்கள் பின்தங்கிய பிரதேசங்களில் அல்லது யுத்த பிரதேசங்களில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற முன்வருவார்களானால் அதனை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்க்கப்போவதில்லை. மாறாக கொழும்பில் உள்ள பிரபல்யமான மருத்துவ மனைகளில் கடமையாற்ற அவர்கள் விரும்பினால் நாம் அனுமதிக்க முடியாது என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க தலைவர் டாக்டர் ஆனந்த சமரசேகர தெரிவித்தார்.

வெளிநாட்டு டாக்டர்களை இலங்கையில் கடமையில் ஈடுபடுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும் இடையில் உள்ள கருத்து வேறுபாடுகள் பற்றி வினவப்பட்டபோது அதற்கு விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

நாட்டின் இக்கட்டான சூழ்நிலையில்நாட்டில் இருந்து வெளியேறிய பலர் வெளிநாட்டு டாக்டர்களை தருவிக்கும் அமைச்சின் திட்டத்தை பயன்படுத்தி இங்கு வந்து கடமையாற்ற விரும்புகின்றனர். அவர்களை ஒப்பந்த அடிப்படையில் வெற்றிடமுள்ள பின்தங்கிய அல்லது யுத்த பிரதேசங்களில் நியமிப்பதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அவர்களில் பலர் தாம் வெளிநாட்டு தகைமை வைத்துள்ளோம் என்று காரணம் காட்டி கொழும்பில் உள்ள பிரபல்யமான மருத்துவமனைகளில் நியமனம் பெறுவதை நாம் அனுமதிக்க முடியாது. இப்படியான இடங்களுக்கான நியமனங்கள் சேவைக்காலம் மற்றும் மூப்பு அடிப்படையிலேயே வழங்கப்படல் வேண்டும்.

அதேவேளை வெளிநாட்டில் இருந்து இங்கு வருபவர்கள் எமது உள்நாட்டு டாக்டர்களை விட சிறப்பாக பணி புரிவார்கள் என்ற கருத்தை நாம் ஆதரிக்க முடியாது. உள்நாட்டு டாக்டர்களே இலங்கையின் தற்போதைய சூழ்நிலைக்கேற்ற சிகிச்சைகளை வழங்குவதில் வல்லவர்களாவர். ஆகவே வெளிநாட்டில்இருந்து வரும் டாக்டர்கள் அவர்கள் எந்த தகைமையை உடையவர்களாக இருந்தாலும் இலங்கை மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம்நடத்தும் பரீட்சையில் சித்தியடைந்தால் மாத்திரமே இங்கு நிரந்தர நியமனம் வழங்க அனுமதிக்கப்பட வேண்டும். இதனை கருத்தில் கொண்டே அமைச்சும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

## ஆயிரக்கணக்கான மக்கள் கிழக்கில் இடம் பெயர்வு

கிழக்கில் இடம் பெற்ற சூரிய கிரகண இராணுவ நடவடிக்கையினால் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி. அம்பாறை மாவட்டத்தின் வடபகுதி மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏறாவூர்பற்று. இலுப்படிச்சேனை, வேப்புவெட்டுவான், உன்னிச்சை, உறுகாமம் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர்.

வாகரைப்பகுதியில் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்கு எம்.எஸ்.எவ். தொண்டர் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை.




தமிழினத்திற்கு எதிரான சந்திரிகாவின் சுயரூபத்தை ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத்தின் அறிக்கை நன்கு தோலுரித்துக் காட்டியது. சந்திரிகாவினுடைய அதிகாரப் பரவல் திட்டம் என்பது உலகை ஏமாற்றி பிரச்சினையைப் பிற்போடும் ஒரு தந்திரமே என்பதையும் நன்கு விளக்கியிருந்தது.

ஜி.எச். அத்தாவுல்லா, வேலூர்-3.

''அந்த நகல் திட்டம் என்ன ஆயிற்று?'' என்ற தலைப்பில் இடம் பெற்ற 'ஈழசுதந்திரனின்' ஆசிரியத் தலையங்கம் முதற்பக்க அறிக்கைக்கு ஒரு விளக்கம் போல் அமைந்திருந்தது. ஆம்; யாழ்ப்பாணத்தை வெற்றி கொள்வதற்கு முன்பு சந்திரிகா அறிவித்த நகல் திட்டத்திற்கும் பின்பு அறிவித்த நகல் திட்டத்திற்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது.

மா. கணபதி, திருத்துறைப்பூண்டி

''இலங்கைத் தமிழ் அகதி மக்களுக்கு என்றும் பாதுகாப்பாக இருப்போம்'' என்ற ஐ.நா. அகதிகள் உயராணையக அதிகாரியின் பேச்சு வரவேற்கத்தக்கதே. ஆனால் அதை நடைமுறைப்படுத்த யு.என்.எச்.சி.ஆர். இன்னும் எவ்வளவோ செய்தாக வேண்டும்.

கே.எம். மாரிமுத்து, சங்கரன்கோவில்.

கிளிநொச்சியில் தங்கியிருக்கும் யாழ்ப்பாண மக்களின் நிலையை 'சுப்பையர் பேசுகிறார்' பகுதி நன்கு விளக்கியிருந்தது. என்றாலும் சுப்பையர் இன்னும் விவரமாகப் பேசினால் நன்றாக இருக்கும்.

எம்.எஸ்.எஸ். நாதன், சேலம்-3.

'ஒரு குறளை உணர்வோம்' 37வது குறட்பாவுக்கு அருகோ கூறியிருந்த பொருள் புதுமையாகவும், பொருத்தமாகவும் இருக்கிறது.

வித்துவான் மா. வேம்பு, மயிலாடுதுறை.

மலசல உபாதிகளைக் கழிப்பதில்கூட அகதிமுகாம் மக்களுக்குள்ள அவல நிலையை ஜெயசக்திவேலின் 'தூக்குக் கயிற்றில் இயற்கை' சிறுகதை நன்கு எடுத்துக் காட்டியது.

R.R. குணவதி, காரைக்குடி.

''ஈழத் தமிழர்களின் அழிவினால் உலக அமைதியே ஒழியப் போகிறது'' என்ற சாலையாரின் எச்சரிக்கை காலத்தின் குரல். சர்வதேச சமுதாயம், குறிப்பாக அண்டையில் இருக்கும் அன்னை இந்தியா இதுபற்றிச் சிந்திக்க முன்வருமா ?

பொன். கணேசலிங்கம், தஞ்சை-7.

மூங்கிலூரணி அகதிமுகாமைச் சேர்ந்த எஸ். ஜுலித் சாஜி எம்.ஏ.வின் 'சூழலில் ஒரு கண்ணோட்டம்' கட்டுரை அருமை.

எஸ். பிரேம்குமார், இராமநாதபுரம்.

''யாழை விட்டு இராணுவம் வெளியேறினால் வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் அரசுடன் பேசுவதற்குத் தயார்'' என்று இப்போது கூறும் புலித்தலைவர் பிரபாகரன், யாழ்ப்பாணத்தைத் தன் ஆதிக்கத்தில் வைத்திருந்தபோதே கூறியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் ?

என். கே. ஆரோக்கியசாமி, திருச்சி-1.

''கரம் இணைவோம்'' என்ற தலைப்பில் கவிதைச் சரம் பகுதியில் இடம்பெற்ற தமிழீழதா[...]சனின் பாடல் ஒற்றுமையை வலியுறுத்தும் உன்னதமான [...] பாடலாகும். அதை ஈழத்தமிழர் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு [...]கழ்ச்சியிலும் பாடும்படிச்செய்வது பயனுடையதாக இருக்கு[...]ம்.

கா. வ. மணியரசன், நாகபட்டினம்.

'ஈழசுதந்திரன்' வளர்ச்சி-விநியோக[...]ம் பற்றி ச. ஜெயராசா எழுதியிருந்த விடயம் ஏற்கத் தக்[...]து. செயல்படுத்த வேண்டியது.

தி. அண்ணாம[...]லை, கடலூர்.

'வாழ்த்துடன் ஒரு வார்த்தை' என்[...]கிற தலைப்பில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழக நிறுவனர் [...] திரு. சந்திரகாசன் அவர்கள் விடுத்திருந்த பொங்கல் வாழ்[...]த்து அட்சர லட்சம் பெறும். அவருடைய அந்த வார்த்தை[...]ய அனைத்துத் தமிழர்களும் வழிமொழிந்து உடனே நடவ[...]டிக்கை மேற்கொள்ள வேண்டும்.

புலவர். நெடுஞ்செழியன், [...]பருமணஞ்சேரி.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# இந்தியா எம்மை என்றுதான் பார்க்கும்?...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுத்தவரை யார் கிட்டே சொல்லி அழுவதென்று தெரியாமல் ஒவ்வொருவரும்புழுங்கி செத்துக் கொண்டிருக்கிறார்கள். "நான் எவ்வளவு கஷ்டப்படுறேன்னு அடுத்தவரிடம் சொல்ல ஆசைப் படறேன். ஆனா, அந்த ஆளு சொல்லுற கஷ்டத்தைக் கேட்டா என் கஷ்டத்தைச் சொல்லத் தோணல" இப்படி அங்கு எல்லாருமே தாங்கள் படுகிற கஷ்டத்தை சொல்வதற்கு ஆள்கூடக் கிடைக்காமல் அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசு சாராத் தொண்டு நிறுவனங்களை (N.G O) பொறுத்தவரை செடக், எஸ். சி எப்., ரெக்பானா, M S F., UNHCR என ஐந்து தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன.

ஆனால் இவர்களுடைய அலுவலகங்கள் கொழும்பில்தான் உள்ளன. இதனால் இந்த 5 தொண்டு நிறுவனங்களும் சேர்ந்து பெந்தோட்டா என்ற இடத்தில்ஒருகூட்டம் நடத்திய போது சிங்களவர்களும் புத்த பிக்குகளும் திரண்டு வந்து கல்லெறிந்து கலாட்டா செய்திருக்கிறார்கள். "நீங்க தமிழ் மக்களுக்கு உதவி செய்வதாகச் சொல்லி புலிகளுக்கு ஆதரவு தருகிறீங்க" என்று குற்றம் சாட்டி கூட்டமே நடத்த முடியாதபடி விரட்டியடித்திருக்கிறார்கள். இதே காரணத்தைக்காட்டி இலங்கை பத்திரிகைகளும் குறிப்பாக சிங்களப் பத்திரிகைகள், அரசு ஆதரவு ஆங்கிலப் பத்திரிகைகள் தொண்டு நிறுவனங்களை அனுமதிக்கக் கூடாது என்று பிரச்சாரம் செய்து வருகின்றன.

### துடைப்பற்திற்கும் சோதனை

இதனால் தொண்டு நிறுவனங்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு எந்த நிவாரணப் பொருள்களைக் கொண்டு போவதானாலும், ஒருதுடைப் பக்கட்டையானாலும் அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத் தான் கொண்டு போகமுடியும். அத்தோடு வழி நெடுகிலும் ஒவ்வொரு செக் பாயின்டிலும் காண்பித்தாக வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் UNHCRக்கு இலங்கையில் இருக்கிற மரியாதையைச் சொன்னாலே இதர தொண்டு நிறுவனங்களுக்கு அங்குள்ள மரியாதை புரியும். ஒரு சிறீலங்கா அமைச்சர் ஒரு நாள் சொன்னதாக பத்திரிகையில் செய்திவந்தது. என்ன தெரியுமா? "நாங்கள் விருப்பப்பட்டால் வேலை செய்வதற்குத்தான் இங்கே UNHCR இருக்கு. தாங்களாகச் செய்வதற்கு இல்லை. தேவைப் படும்போது நாங்கள் கூப்பிடுவோம் தயாரா இருக்கணும். நாங்க கூப்பிடும்போது மட்டும் தான் நீங்க வேலை செய்யணும் நீங்களா வேலைசெய்ய ஆசைப்படக்கூடாது" என்று பேசியிருக்கிறார். அப்படியானால் மற்றத் தொண்டு நிறுவனங்களின் நிலைமை என்னவாக இருக்கும் என்று சொல்லவே தேவையில்லை.

ஆக, எல்லாமே சிறீலங்கா அரசாங்கத்தோட கட்டுப் பாட்டிலேதான் இருக்கு. அரசாங்கம் அனுமதி கொடுத்தால் தொண்டு நிறுவனங்கள் தமிழ் மக்களுக்குச் சேவையாற்றத் தயாராகவே இருக்கின்றன. ஆனால் தமிழ் மக்களின் மனநிலை எப்படியிருக்கிறதென்றால் வீட்டை விட்டுவந்த குழந்தைகள் மாதிரி யாழ்ப்பாணத்தின் நினைவாகவே இருக்கிறார்கள். "எப்படியாவது இந்தியாவை உதவி செய்ய வைத்து எங்களைத் திருப்பி யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வழி செய்யுங்க. அது தான் எங்க சொந்த வீடு. அங்கேதான் வாழ்ந்தவங்க நாங்க. இப்படிக் கொண்டு வந்து காட்டிலே போட்டுட்டாங்க. சிறீலங்கா அரசாங்கமோ, UNHCR போன்ற தொண்டு நிறுவனங்களோ மனிதாபிமான அடிப்படையிலே கூட எங்களுக்கு உதவ முன்வரலே. புலிகளாலும் எங்களைக் காப்பாற்ற முடியலே. அதனால இந்தியா உதவிக்கு எப்போது வரும் என்று ஒவ்வொரு நாளும் நாங்க இந்திய வானொலியைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதிலே என்னென்னமோ அறிவிப்புகள் வருகிறதே தவிர எங்களைப் பற்றி ஒரு அனுதாப வார்த்தைகூட வராதது கவலையாய் இருக்கு" என்று கண்ணீர்மல்கக் கூறுகிறார்கள் அம்மக்கள்.

(அம்மக்களின் அவலச் செய்திகள் அடுத்த இதழில் மேலும் இடம்பெறும்.)

# இப்படியும் நடக்கின்றது

பஸ்ஸில் பயணம் செய்தபோது தமிழில் பேசிக்கொண்டு சென்றவர்களை தமிழர்கள் என்பதால் புலிகள் என போலீஸாரிடம் காட்டி கொடுத்தவர்களையும் நெற்றியில் பொட்டு இட்டுக்கொண்டு பயணம் செய்த பெண்களை தமிழச்சி என்பதால் புலி என இருப்பதற்கு இடம் கொடாமலும் பஸ்ஸில சென்றவர்களைப் பற்றிய சம்பவங்கள் குறித்து அறிந்துள்ளோம்.

ஆனால் தமிழர்களும் சிங்களவர்களும் ஒரே இனத்தவர்கள் என்று நினைக்கும் நல்ல மனம் படைத்தவர்களும் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களும் பஸ்களில் பயணம் செய்கிறார்கள் என்று அறியும் போது மிகவும் ஆறுதலாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறது.

கொழும்பில் அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று பற்றி தெரியவருவதாவது:

கொழும்பு ஆமர் வீதி சந்தியிலிருந்து 100 யார் தொலைவில் சென்ரல் வீதியில் இராணுவ சோதனை சாவடி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவ்வீதியால் செல்லும் வாகனங்கள் மற்றும் பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்வோர் இறக்கப்பட்டு அவர்களது அடையாள அட்டைகள் சோதிக்கப்பட்டு வருகின்றன.

அவ்வீதியால் சென்ற பஸ் வண்டியில் சுமார் 60 வயது மதிக்கத்தக்க வயோதிகரும் பயணம் செய்தார். அவரிடம் அடையாள அட்டை இருக்கவில்லை. அவர் இராணுவ அதிகாரிகளிடம் சாதுரியமாக பேசி தனது பயணத்தை தொடர அனுமதி பெற்றுக்கொண்டார்.

பஸ்ஸினுள் மீண்டும் தனது ஆசனத்தில் அமர்ந்த அவர் "இது என்ன நாடு? தமிழருக்கும் சோதனை, சிங்களவருக்கும் சோதனை" என்று சொற்களை உதிர்த்துவிட்டார்.

உடனே அவரது முன் ஆசனத்திலிருந்தவர் நீங்கள் "தமிழரா? சிங்களவரா?" என்று கேட்டார்

"நான் தமிழன் என்றா நீ நினைத்தாய். நான் சிங்களவன் தான் இரத்தினபுரியைச் சேர்ந்தவன்" என்று பதில் கூறினார்.

"அப்படியானால் ஏன் நீங்கள் தமிழருக்கும் சோதனை சிங்களவருக்கும் சோதனை என்று கேட்கிறீர்கள். நாட்டு நிலைமை உங்களுக்குத் தெரியாதோ?" என்று முன் ஆசனக்காரர் கேட்டார்.

முதியவர் புன்சிரிப்பை உதிர்த்துவிட்டு "தமிழராவது சிங்களவராவது உமக்குத் தெரியாதோ நாம் எல்லோரும் விஜயனின் வாரிசுகள் என்று தமிழர்கள் எங்கிருந்து வந்தார்களோ அங்கிருந்துதான் விஜயனும் இலங்கை வந்தான். ஆகவே நாம் எல்லோரும் ஒரினத்தவரே" என்று ஒரு போடு போட்டார்.

முன் ஆசனக்காரர் அசடு வழிய அடுத்த பஸ்தரிப்பில் இறங்கி மாயமாகிவிட்டார்.

பஸ்ஸில் இருந்த ஏனைய பெரும்பான்மை இனத்தவர் வயது முதிர்ந்தவரை பாராட்டியபோது இப்படியும் நல்ல மனம் படைத்தவர்கள் நாட்டில் வாழ்வதையிட்டு ஆச்சரியமாக உள்ளது.




யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது * இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே! குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.

நா.மா. தீனன்-சென்னை-14.

கேள்வி: இஸ்ரேலில் பாலஸ்தீனர்கள் ஒரு சுயாட்சிப் பகுதியைப் பெற்று, அதற்கு முறைப்படியான தேர்தலையும் நடத்தி முடித்து விட்டார்கள். இலங்கையில் தமிழ் மக்களுக்கு 1987லேயே அத்தகைய வாய்ப்புக் கிடைத்தும் அதை நழுவ விட்டது யார் குற்றம்?

பதில்: பாலஸ்தீனத்தில் மத்தியஸ்தம் செய்து வைத்த அமெரிக்கா இன்றும் அதைக் காப்பதில் அக்கறையுடன் துணை நிற்கிறது. 1987ல் இலங்கையில் அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த இந்தியா அப்படியிருக்கவில்லை. ஆனால் எத்தனையோ குறைபாடுகள் இருப்பினும் அதற்காக பாலஸ்தீன விடுதலை இயக்கம் அமெரிக்காவை அங்கிருந்து வெளியேறச் சொல்லவில்லை. விடுதலைப் புலிகளோ இந்தியாவை வெளியேறச் சொன்னார்கள். என்றாலும் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் நிலை அது இல்லையென்பதால், பிரச்சினை தீர்க்கப் படக்கூடாது என்பதற்காக இந்தியாவை ஒதுங்கிக் கொள்ள வைத்த சிறீலங்கா அரசே குற்றவாளி

கே: இஸ்ரேலில் பாலஸ்தீனப் பிரச்சினைக்கான சமாதானத் திட்டத்தை முன் வைத்த இட்ச்ஹாக் ராபின் போற்றப்படும்போது, இலங்கையில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானத் திட்டத்தை முன் வைத்துள்ள சந்திரிகாவும் போற்றப்பட வேண்டியவர்தானே?

ப: ராபின் முன் வைத்த சமாதானத்திட்டத்தில் பாலஸ்தீன சுயாட்சிப் பகுதிக்கு பாலஸ்தீன் என்று பெயர் வைக்கக்கூடாது என்று தடை போடவில்லை. சந்திரிகாவின் சமாசத்திட்டத்திலோ தமிழ்ப் பேசும் கிழக்கும் வடக்கும் இணைந்திருக்க அனுமதிக்கப் படவில்லை என்பதுடன், அதைத் தமிழ் ஈழம் அல்லது தமிழ் மாகாணம் என்று அழைக்கவும் கூடாது என்று தடை விதிக்கிறார் உங்கள் வீடு என்று சொல்லிக் கொள்ளக்கூட உரிமையில்லாமல் உங்களுக்கு ஒரு வீடு ஒதுக்கப்படும் என்றால் அதை எப்படிப் போற்றுவீர்கள்?

தே. ஞானப்பழம்-இராசிபுரம்.

கே: சந்திரிகாவின் சமரசத் திட்டம் பற்றி முன்னாள் பிரதமர் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் நடத்திய பேச்சின் முடிவு என்ன?

ப: மௌனம்!

கே: பௌத்த சங்கங்கள் ஏற்காதவரை சந்திரிகாவின் நகல் திட்டம் நடைமுறைக்கு வரும் என்று கருதுகிறீர்களா?

ப: அவர் நடைமுறைப் படுத்துவதற்காக அதைக் கொண்டு வந்தார் என்று யார் சொன்னது? சிறீலங்காவின் ஆளுங்கட்சிகள் காலங்கடத்தி உலகைக் கண் துடைப்பதற்காகச் செய்யும் மோசடிகளில் பத்தோடு பதினொன்று. அத்தோடு இது ஒன்று!

தீ.ப. இராமன்-குடந்தை.

கே: தமிழ் மக்களுக்கு உகப்பான அம்சம் எதுவுமே இல்லாமலிருந்தும் சந்திரிகாவின் நகல் திட்டத்தை பல தமிழ்க் கட்சிகள் வரவேற்றிருப்பது எதைக் காட்டுகிறது?

ப: கொழும்பிலிருந்து கொண்டு குப்பை கொட்ட குறைந்த பட்சம் அது தேவையாயிருக்கிறது என்பதை!

கே: தமிழ்க் கட்சிகள் தங்கள் ஆதரவைத் திருப்பப் பெற்றால் சந்திரிகா அரசு கவிழும்தானே!

ப: சிறீமா அரசு தான் கவிழும். சந்திரிகா தொடர்ந்து குடியரசுத் தலைவராக இருப்பார்.

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, Salt Colony. Ist Street, IIIrd Floor, Egmore, Madras-600008
Printed at Kuralnery Achagam, Madras-94.

சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை.